விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 19 | சனிக்கிழமை | (04.12.2004) | தொலைபேசி - 2223378, 2227644 | ஒலி 351

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦ வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦ 365 நாள் சேவை
♦ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## சமாதானத்துக்கு அரசாங்கம் தயார்

# பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க

# புலிகளின் நிபந்தனையே தடை!

## குற்றஞ்சாட்டுகிறார் அமைச்சர் கதிர்காமர்



(கொழும்பு)

**இடைக்காலத் தன்னாட்சி அதிகார வரையின் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் நிபந்தனையே சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கத் தடையாக உள்ளது.**

**இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் பாராளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.**

வரவு - செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அமைச்சர் கதிர்காமர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

தடைப்பட்ட சமாதான பேச்சுவார்த்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்மின் இலங்கை விஜயம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாளை மறுதினம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்த நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் இலங்கை விஜயம் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் காணப்படுகின்ற தேக்க நிலையைப் போக்கும் வகையில் முக்கிய அரசியல் நகர்வுகளை அவதானிக்கும் நோக்கிலேயே இவரது விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரஸ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னாபிரிக்காவில் மாவீரர் நாள் நிகழ்வு

(கொழும்பு)

தென்னாபிரிக்க தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் ஈழத் தமிழர்களும் இணைந்து ஏற்பாடு செய்த மாவீரர்நாள் நிகழ்வுகள் மண்டபம் நிறைந்த மக்களுடன் சர்ட்ஸ் பேத் ஏரிக்கரை அருட்பா கழகத்தில் நடைபெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பித்த நிகழ்வில் மங்கள விளக்கை திருமதி சிறீதேவி பத்மநாதன் ஏற்றிவைக்க சிறப்புரையினை திருநாவலர் நிகழ்த்தினார்.

தமிழரின் விடிவை எடுத்தியம்பும் இரண்டு நாட்டிய நிகழ்ச்சிகளை குமாரி சிவானி சின்னப்பன் வழங்கினார். தமிழ்மிரர் இளைஞர்கள் நிகழ்வில் எழுச்சி கீதங்களை இசைத்தனர்.

தென்னாபிரிக்கா தனது விடுதலைப் பாதையில் சந்தித்த சவால்கள் பற்றி திருமதி மகி கொவன்டர் சிறப்புரையாற்றினார்.

(இ-04)

## அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக்குடியமர முடியாது!

### உயர் நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் பலாலி விமான நிலையம் மற்றும் அதனை அண்டிய அதியுயர் பாதுகாப்புவலய பிரதேசத்தில் பொதுமக்கள் குடியமர அனுமதி வழங்க முடியாதென உயர்நீதிமன்றத்திற்கு சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றஉறுப்பினர் மாவை சேனாதிராஜாவும், யாழ். குடாநாட்டு விவசாயிகள் சிலரும் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல்மீதான மனுவை நேற்று ஆராய்ந்தபோதே பொதுமக்கள் மீளக் குடியமர அனுமதி வழங்கமுடியாதென நீதிமன்றத்திற்கு சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (இ-08)

## சாவகச்சேரியில் மினிபஸ் - ஹன்டர் நேற்று நேருக்கு நேர் மோதி விபத்து!

### சுவிஸ் பிரஜை உட்பட 8 பேர் படுகாயம்





(சாவகச்சேரி)

சாவகச்சேரி கண்டி வீதியில் மினிபஸ்சும் ஹன்டர் வாகனமும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் எட்டுப்பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இவ் விபத்து இடம்பெற்றது.

சம்பவத்தில் சுவிஸ்லாந்து நாட்டைச் சேர்ந்த மெதலிஸ் எமி (வயது 80), ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கே. சிவனேசன் (வயது 23), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். நிஷாந்தன் (வயது 16), அளவெட்டியைச் சேர்ந்த ஜி. தேவயானி (வயது 35), கொடிகாமத்தைச் சேர்ந்த எஸ். செல்வசீலன் (வயது 27), சங்கானையைச் சேர்ந்த ஏ. சிவதாஸ் (வயது 44), சாவகச்சேரியைச் சேர்ந்த என். தயாளினி (வயது 12), சங்கானையைச் சேர்ந்த கே. சிவதீசன் (வயது 24) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ்சும் நுணாவிலிலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஹன்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு ஆளுநராக டிரோன் பெர்னாண்டோ நியமனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண புதிய ஆளுநராக முன்னாள் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ நியமிக்கப்படவுள்ளார். எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் இவரது நியமனம் நடைமுறைக்கு வருகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியகட்சியின் கடந்த ஆட்சிக்காலத்தில் வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்த இவர் கடந்த நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியகட்சி தனக்கு தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் நிலையை ஒதுக்கித்தரும் என நம்பிக்கை கொண்டிருந்தார்.

ஆனால் எதிர்பார்த்திருந்த எம்.பி. பதவி கிடைக்காததால் விசனமடைந்த டிரோன் ஐ.தே.கவிலிருந்து விலகி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### வெளிவிவகார அமைச்சு நிதி ஒதுக்கீடு

## ஐ.தே.கவின் முடிவுக்கு முரணாக மகேஸ்வரன் எம்.பி வாக்களிப்பு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானத்துக்கு முரணாக கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி. ரி. மகேஸ்வரன் எதிர்த்து வாக்களித்தார்.

இவ் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது ஐக்கிய தேசியக்கட்சி ஒதுங்கியிருந்தது என்றும் இதற்கு மாறாக மகேஸ்வரன் எம்.பி. எதிர்த்து வாக்களித்தார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தமிழராக இருந்தும் தமிழர்களுக்கு எதிராக செயல்படுவதன் காரணமாகவே அவரது அமைச்சு மீதான வாக்கெடுப்பின்போதுதான் எதிர்த்து வாக்களித்ததாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# இன்று ஒரு தகவல்

## மனித மரியாதை

ஒரு பெரிய அரசியல் கூட்டத்தின் மத்தியில் ஒரு வயதான பெரியவர் எதையோ தேடிக்கொண்டிருந்தார். வயதான காலத்தில் வந்த இடத்தில் எதையாவது போட்டிருப்பார் போலிருக்கிறது என்று நினைத்து அவரின் அருகே நின்று கொண்டிருந்த ஒருவர் அவரை நெருங்கி" ஐயா பெரியவரே என்ன தேடுகிறீர்கள்?" என்று கேட்டார்." மனிதனைத் தேடுகிறேன்" என்றார் அந்தப் பெரியவர். இதைக் கேட்டவர் மிரண்டு ஓடிவிட்டார்.

செம்மறியாட்டுக்கென்று சில சுபாவம் உள்ளது. சிங்கம், புலி,கரடிக்கு சில சுபாவம் உள்ளது. நரிக்கு சில சுபாவம் உள்ளது.இப்படிப்பட்ட மிருக சுபாவம் எல்லாம் மனிதனிடம் ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு மாதிரித் தலைதூக்கும். அதனால் அவன் மனித சுபாவத்தை மறந்து விடுகிறான். அதனால் தான் மனிதனைத் தேட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மிருகங்கள் மனிதன் போல வேடம் போடுவதில்லை. ஆனால் மனிதன் மிருகம் போல வேஷம் போடுவது உண்டு. சில சமயம் அப்படியே மாறிப்போவதுமுண்டு.

பி.ஏ படித்த ஒருவன் வேலை தேடி அலைந்தான். எத்தனையோ இடத்தில் முயன்றும் பயனில்லை. அந்த நேரத்தில் ஒரு சர்க்கஸ் கம்பனி அவர்களின் ஊருக்கு வந்தது. அந்தக் கம்பனியின் முதலாளி யைச் சந்தித்து" ஐயா எனக்கு ஒரு வேலை தாருங்கள்" என்றான். அவர்" உனக்கு பார் விளையாட்டு தெரியுமா?" என்றார்."எங்கள் கல்லூரியில் அதைக் கற்றுக் கொடுக்கவில்லை" என்றான்." பயில்வான் மாதிரி எடைதூக்க முடியுமா?" என்றார்." இருக்கிற பட்டத்தைச் சுமக்க முடியாமல் கஷ்டப்படுகிறேன்" என்றான்."அப்படி இருக்கும் போது நான் என்ன செய்ய முடியும்?" என்றார்." சும்மா ஒரு கோமாளி வேடமாவது கொடுங்கள்" என்றான். சரி என்றார் முதலாளி." என்ன செய்ய வேண்டும் சொல்லுங் கள்"என்றான் இவன்.

" எங்கள் கம்பனியில் ஒரு கரடி இருந்தது. அது சில நாட்களுக்கு முன் இறந்துவிட்டது. அதன் தோலை எடுத்து அப்படியே பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம். நீ தினமும் அந்தத் தோலை எடுத்து உனது உடம்பில் போர்த்திக் கொள்ள வேண்டும். கரடி மாதிரியே வித்தை காட்ட வேண்டும். உன்னைக் கூண்டில் அடைத்து கூடாரத்திற்குக் கொண்டு வர வேண்டும். நீ கரடி மாதிரியே நடிக்க வேண்டும். நீ மனிதன் என்ற ரகசியம் எனக்கும் உனக்கும் மட்டுமே தெரிந்ததாக இருக்க வேண்டும்" என்றார். இவனும் ஒத்துக்கொண்டான்.

அன்றே வேஷம் போட ஆரம்பித்துவிட்டான். முதல் காட்சியில் கூண்டு வண்டி கூடாரத்திற்குள் வந்து நின்றது. கம்பிக் கதவைத் தூக்கிவிட்டனர். கரடி வெளியே குதித்தது. வித்தை காட்டியது. பார்ப்பவர்களுக்கு பரம சந்தோஷம். கரடிக்கும் குஷி. காட்சி முடிந்ததும் மீண்டும் கூண்டுக்குள்ளே அடைத்து கொண்டு போய்விட்டார்கள்.

அப்பாடா என்று களைத்துப் போய் அந்தக் கூண்டுக்குள் ஒரு மூலையில் உட்கார்ந்துவிட்டான். வேடத்தைக் கூடக் கலைக்கவில்லை. கொஞ்சநேரம் கழித்து மெதுவாகக் கண்திறந்து பார்த்தான். திடீரென்று ஒரு அதிர்ச்சி. அந்தக் கூண்டுக்குள் ஏற்கனவே அடைத்திருந்த ஒரு பெரிய கருங்குரங்கு குதித்துக் கொண்டு இவனிடம் ஓடிவந்தது. இவன் பயந்து போய்க் கத்த ஆரம்பித்துவிட்டான். வெளியேயும் வரமுடியவில்லை கதவு பூட்டியிருக்கிறது. "ஐயையோ!" என்று கத்திக் கொண்டு அங்கு மிங்கும் ஓட ஆரம்பித்துவிட்டான்.

மெதுவாக அந்தக் கருங்குரங்கு இவனிடம் வந்து இவனது கையைப் பிடித்துக் கொண்டு" பயப்படாதே" என்றது. இவனுக்கு ஒரே ஆச்சரியம். "என்ன கருங்குரங்கு பேசுகின்றதே என்று. அந்தக் கருங்குரங்கு சொல்லியது "தம்பி பயப்படாதே நீ பி.ஏ படித்துவிட்டு இந்த வேஷம் போட்டிருக்கிறாய். நான் எம்.எ படித்துவிட்டு இந்த வேஷம் போட்டிருக்கிறேன் நானும் உன்னை மாதிரித் தான் பிழைப்புக்காக வேஷம் போட்டிருக்கிறேன்" என்றதாம்.

பிழைப்புக்காக மனிதன் மிருகமாவதைக் கூட சகித்துக் கொள்ளலாம். மனிதனே மிருகமாக மாறுவதை எப்படி சகித்துக்கொள்ள முடியும்? எனக்கென்னவோ 'மனித மரியாதை' நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவது போல் தெரிகிறது. மனித உயிரின் விலையே இப்போது மிகவும் மலிந்துவிட்டது. இன்று யாரும் சுட்டுக்கொல்லப்பட வில்லையென்றால் அதுதான் பெரிய செய்தி. எல்லாவற்றுக்கும் யார் காரணம் என்று நினைக் கிறீர்கள் மனிதன்தான். துப்பாக்கி குண்டையும் அவன் தான் செய்கிறான். துப்பாக்கி குண்டு துளைக்க முடியாத காரையும் அவன் தான் செய்கிறான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சமாதானப் பேச்சை உடன் ஆரம்பிக்குக!

## வட-கிழக்கிலுள்ள தொழிற்சங்கங்கள் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

தமிழீழத் தேசியத்தலைவரின் மாவீரர் தின உரையின் படி இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை வழங்கி தேங்கியுள்ள சமாதானப் பேச்சு வார்த்தையை உடன் ஆரம்பிக்குமாறு வேண்டுகிறோம் என வட-கிழக்கைத் தளமாகக் கொண்ட நான்கு தொழிற்சங்கங்கள் ஒன்றாக இணைந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு நீண்ட மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளன.

வட- கிழக்கு மாகாண அரச ஊழியர் சங்கம், வட-கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனம், அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் மற்றும் அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி ஆகிய நான்கு அமைப்புகளின் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனை உவெஸ்லி கல்லூரியில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மேற்படி தீர்மானம் உள்ளிட்ட மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு உரியவர்களுக்குஅனுப்பிவைக்கப்பட்டன. அவற்றில் முக்கிய தீர்மானங்கள் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வரவு -செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் கடமை நேரத்தை 9 மணி நேரம் நீடிக்கப்பட்டதை வன்மையாகக் கண்டித்ததுடன், அதனை வாபஸ் பெறுமாறும் கோரப்பட்டுள்ளது.

வட-கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி கைத்தொழில் அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தும் தலைவர் லோகநாதனை மண்டபத்துள் அனுமதிக்க விடாமல் தடுத்த அமைச்சின் செயலாளர் கமலாசி வசிதம்பரத்தின் மனிதாபிமானமற்ற நரித்தனமான நடவடிக்கையைக் கண்டித்தல், கல்முனை மாநகரசபை ஊழியர்களின் கோரிக்கைகள் 15.01.2005க்கு முன்னர் நிறைவேற்றப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை எடுத்தல், அதற்கான முன்னறிவித்தலை மாநகர ஆணையாளருக்கு அறிவித்தல், வட-கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் வரை விட்ட சேவையாளர்களை சார்ந்த பாடசாலை பணியாளர்க்கும்,10 வருடங்களுக்குமேல் பணியாற்றும் பணியாளர்களுக்கும் பதவியுயர்வு வழங்கி இடமாற்றம் செய்யக் கோருதல்,மன்னார், வவுனியா, திருமலை மாவட்ட வன்முறைகளை வன்மையாகக் கண்டித்தல் போன்ற தீர்மானங்கள் அங்கு நிறைவேற்றப்பட்டன. (ந-4)

## ஆயுதப் பாவனையை கட்டுப்படுத்துவது குறித்து மாவட்ட மட்ட மாநாட்டில் விரிவாக ஆராய்வு

(திருநெல்வேலி)

அதிகரித்துவரும் ஆயுத பாவனையைக் கட்டுப்படுத்துவது குறித்து சமூக மட்டப் பிரதிநிதிகளுடன் ஆராயும் பவ்ரல் அமைப்பின் மாவட்ட மட்ட மாநாடு ஒன்று நேற்றுமுன்தினம் காலை யாழ். வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இடம்பெற்றது.

இம் மாநாட்டில் பவ்ரல் அமைப்பின் வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பாளர் என். பகீரதன் மற்றும் இவ் அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் நிர்மானுஜன் ஆகியோர் இதுவிடயம் குறித்து விரிவாக விளக்கிக் கூறினர்.

மேற்படி மாநாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் என சுமார் 50 பேர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாகாண ரீதியில் இவ்வாறான கருத்தரங்கு ஒன்றை இம்மாத நடுப்பகுதியில் வவுனியாவில் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டதுடன்,ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தலா 3 பேர் இம்மாநாட்டில் பங்குபற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, வவுனியாவில் நடைபெறவுள்ள இம் மாகாண ரீதியிலான கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத்தலைவர் வே.தவச்செல்வம், வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதி செல்வநாயகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் சார்பில் எம். கதிர்காமத்தம்பி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற-43)

## இராசி பலன்

**04.12.2004**
**கார்த்திகை 19, சனிக்கிழமை**
**சப்தமி பிற்பகல் 2.12 மணிவரை**
**மகம் பிற்பகல் 3.57 மணிவரை**
**இராகுகாலம் 9.16-10.46 மணிவரை**
**சுபநேரம் 3.16-4.46 மணிவரை**
**அமிர்த சித்தம்**
**விநாயகர் விரதம் 8 ஆம் நாள்**

- **மேடம்** தாழ்ந்த சுபாவம், காரிய தாமதம், அஜீரண ரோகம், மனக்கவலை.
- **இடபம்** தன்னம்பிக்கை குறைவு,தன விரயம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், ரோகபயம்.
- **மிதுனம்** மாதர் நட்பு, நற்கீர்த்தி, காரிய அனுகூலம், போசனநன்மை.
- **கடகம்** அதிக செலவு, மனோ சங்கடம், உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம்.
- **சிங்கம்** வெகுமானம், சயன சுகம், எடுத்த கருமங்கள் கைகூடும், போசன நன்மை.
- **கன்னி** சோம்பல் நிலை, சிந்தனை மிகுதி, வீண் அலைச்சல், பண விரயம்.
- **துலாம்** நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம், தனதானிய சேர்க்கை, புதிய விடயம்.
- **விருச்சிகம்** மேன்மையடைதல், நண்பர்கள் உதவி, காரிய சித்தி, சுபநிகழ்வு.
- **தனுசு** வயிற்றுக் கோளாறு, இடமாற்றம், தொழில் மந்த நிலை, பணவிரயம்.
- **மகரம்** மனக்கவலை, பொருள் விரயம், சரீர வியாதி, வாகன பயம்.
- **கும்பம்** வாகன சுகம், குடும்பமகிழ்ச்சி, தேகநலன், நண்பர்கள் சந்திப்பு.
- **மீனம்** தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், புதியதகவல், போசன நன்மை.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
- வளவன்

## மனோ மாஸ்டரை புலிகளே கடத்தினர்

### ஈ.என்.டி.எல்.எவ்., க.கா. குழுவிடம் முறைப்பாடு

(கொழும்பு)

கொழும்பில் காணாமல் போன ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பின் ஸ்தாபகரான மனோ மாஸ்டரை தமிழீழ விடுதலைப்புலிகளே கடத்தியிருப்பதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் அந்த அமைப்பினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

விடுதலைப்புலிகளில் இருந்து பிரிந்து சென்ற கருணா குறித்த தகவல்களைப் பெறுவதற்காகவே அவர்கள் மனோ மாஸ்டரை கடத்தியதாகவும் ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பினர் செய்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை மனோ மாஸ்டரின் தாயார் தனது மகன் பற்றிய தகவல்களைப் பெற்றுத் தருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார்.

மனோ மாஸ்டரை கருணா அணியினரே கடத்திச் சென்றதாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகளையும் மனோ மாஸ்டரின் தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்த முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார். (க-60)

## சரத் அம்பேபிட்டிய கொலை சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரான போதைப் பொருள் வர்த்தகரை இம்மாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட போதே நீதவான் சரோஜினி குசல்லாவ வீரவர்த்தன இவ் உத்தரவைப் பிறப்பித்தார்.

சந்தேக நபர் பலத்த பாதுகாப்பின் மத்தியில் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் விசாரணைகளுக்கும் வழக்கின் சாட்சிகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய நிலை ஏற்படும். இதனாலேயே களுத்துறைச் சிறைச்சாலையில் அவரைத் தடுத்து வைக்குமாறு பொலிஸ் விசேட குற்றத் தடுப்பு பிரிவு அதிகாரிகள் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தனர். இதற்கமையவே நீதவான் சந்தேக நபரை களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (த-8)

# ஒசாமாவின் மெய்க்காவலரிடம் அமெ. அதிகாரிகள் விசாரணை

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின லேடனின் மெய்க்காவலராக இருந்த ஷாதீ அப்துல்லாவிடம் அமெரிக்க அதிகாரிகள் ஜேர்மனியில் விசாரணை நடத்தினர்.

ஆப்கானிஸ்தான் தலிபான்களின் பிடியிலிருந்தபோது அல்-கெய்டா தலைவர் ஒஸாமா பின்லேடன் அங்கு மறைநதிருந்தார். அப்போது ஜோர்டான் நாட்டைச் சேர்ந்தவரான அப்துல்லா ஆப்கானிஸ்தானில் சிலகாலம் ஒஸாமாவின் மெய்க்காவலராகப் பணியாற்றியுள்ளார்.

பின்னர் அங்கிருந்து ஜேர்மன் சென்ற அப்துல்லா அங்குள்ள யூதர்களின் வழிபாடடுத தலத்தை தாக்க முயற்சி செய்ததாகக் கைது செய்யப்பட்டார். இதற்காக நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார்.

சிறையிலிருந்தபோது அல் -சர்காவி பற்றிய பல தகவல்களை அப்துல்லா தெரிவித்தார். அதேபோல் செப்ரெம்பர் 11 தாக்குதலில் முக்கிய பங்கு வகித்த சகாரியா மூ சாவி பற்றிசில தகவல்களையும் கூறினார். இதனையடுத்து அப்துல்லா தண்டனைக் காலத்துக்கு முன்னதாக கடந்த மாதம் விடுதலை செய்யப்பட்டார்.

தற்போது ஜேர்மனியில் தங்கியுள்ள அப்துல்லாவை, செப்ரெம்பர் 11 தாக்குதலின் முக்கய சாட்சியாகச சேர்க்க, விசாரணை நடத்தி வரும் அமெரிக்க அதிகாரிகள் முயற்சிசெய்து வருகின்றனர்.

இதற்காக ஜேர்மன் வந்த அமெரிக்க அதிகாரிகள் அப்துல்லாவிடம் மூன்று நாட்கள் விசாரணை நடத்தினர். விசாரணையின்போது அவரது வக்கீலும் உடனிருந்தார். அப்துல்லா அமெரிக்க அதிகாரிகளிடம் பல முக்கிய தகவல்களைக் கூறியதாகத் தெரிகிறது. சகாரி யா மூ சாவிக்கு செப்ரெமபர் 11 தாகருதலில உள்ள தொடர்பு பற்றி அப்துல்லா கூறியதாகத் தெரிகிறது. இதனால் அப்துல்லா இந்த வழக்கில் முக்கிய சாட்சியாக்கப்படலாம் எனத் தெரிகிறது. (ப)



உலக ஊனமுற்றோர் தினத்தை ஒட்டி மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் நடைபெற்ற விசேட வழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்ட இருசிறுவர்கள் தம் ஊனத்தைப் போக்க அருள்தருமாறு வேண்டிக்கொள்ளும் காட்சி.

## WORLD NEWS உலக தரிசனம்

# மன்மோகன் சிங்- சீன பிரதமரை சந்தித்துப் பேச்சு



இந்தியா - ஆசியான் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக லாவோஸ் சென்றுள்ள பிரதமர் மன்மோகன்சிங், சனப் பிரதமர் ஜீயோவோவை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். வியன் டியன் நகரில் சீனப் பிரதமரும் இந்தியப் பிரதமரும் சந்தித்துப் பேசினார்கள். இருவரும், இந்தியா - சீனா இடையே உள்ள எல்லைப் பிரச்சினைகள் மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசினர்.

சிக்கிமை இந்தியாவின் ஒரு பகுதி என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சீனப்பிரதமரிடம் மன்மோகன்சிங் வலியுறுத்தினார். அதற்கு சீனப் பிரதமர், இதை ஏற்றுக்கொள்கிறோம்.

படிப்படியாக இதற்கான நடைமுறைகளைக் கடைப்பிடிப்போம்.இதை நாங்கள் எதிர்க்கவில்லை என்றார். (ப)

# இரு வாலிபர்கள் வெட்டிக் கொலை

தஞ்சை மருத்துவக் கல்லூரி அருகே ரக்மான் நகர் உள்ளது. இப்பகுதி திறந்த வெளியாகக் கிடக்கின்றது. சம்பவத்தன்று அதிகாலை அப்பகுதி மக்கள் அந்தப்பக்கம் சென்ற போது இரண்டு வாலிபர்கள் சரமாரியாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுக் கிடந்தனர்.

இச்சம்பவம் குறித்து மருத்துவக் கல்லூரி பொலிசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. உடனடியாக பொலிஸார் விரைந்து சென்று பார்வையிட்டனர். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ராஜேந்திரன் விரைந்து சென்று பார்வையிட்டு வீசாரணை நடத்தினார். நான்கு பொலிஸ் தனிப்படை அமைக்க உத்தரவிட்டார் .

கொலை செய்யப்பட்ட வாலிபர்களில் ஒருவர் வேஷ்டி, வெள்ளைச்சட்டை அணிந்திருந்தார். மற்றொருவர் கைலி, சிகப்புச்சட்டை அணிந்திருந்தார்.

இருவர் உடலையும் கைப்பற்றிய பொலிஸார் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மோப்பநாய் வரவழைக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. கொலையுண்ட இடத்தில் மோட்டார் சைக்கிள்,2 அரிவாள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. (ப)

# அமெரிக்காவில் ஹெலி விபத்து 7 இராணுவத்தினர் உடல் கருகிப் பலி

அமெரிக்க இராணுவத்தின் பிளாக் ஹாக் ஹெலிகொப்டர் டெக்சாஸ் மாகாணத்தின் மத்தியில் விபத்துக்குள்ளாகி விழுந்து நொருங்கியதில் அதிலிருந்த அமெரிக்க இராணுவ வீரர்கள் ஏழுபேரும் உயிரிழந்தனர்.

டெக்சாஸின் போர்ட் ஹுட் நகரிலுள்ள இராணுவ தளத்தில் இருந்து டெக்சார் கானா நோக்கி இந்தக் ஹெலிகொப்ரர் சென்றுகொண்டிருந்ததாகவும்,திடீர் இயந்திரக்கோளாறு காரணமாகவும் அது நொருங்கியதாகவும் வோஷிங்டன் அமெரிகக இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

வாகோ என்ற இடத்திலிருந்து தென் மேற்கில் 30 கிலோமீற்றர் தொலைவில் புருஸ்வீல்லீ- எத்டி என்ற இடத்தில் ஹெலிகொப்டர் விழுந்ததாகவும் அவர் கூறினார்.



சீனாவில் உள்ள சான்ஜா நகரில் உலக அழகிப் போட்டி இன்று நடக்கிறது. இதற்கான பல்வேறு போட்டிகளில் 107 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் பங்கேற்று வருகின்றனர். நேற்று நடந்த முகவெட்டுப் போட்டிக்காக போஸ் கொடுக்கின்றனர் இந்த அழகிகள்.

# தாய்லாந்தில் விசித்திர திருமணம் குரங்குகளாக மாறிய மணமக்கள்



இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சோம்லேக் என்ற வாலிபரும், இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த நோக்கா என்று பெண்ணும் குரங்கு சேஷ்டைகளுடன் முறைப்படி திருமணம் செய்துகொண்டனர். இவ்விருவரும் வாலில்லாக் குரங்கு இன நலனுக்காக தாய்லாந்து நாட்டில் சேவைப் பணி ஆற்றிவந்தனர். அப்போது இருவருக்குமிடையில் காதல் மலர்ந்தது. இருவரும் தங்கள் திருமணத்தை தாய்லாந்தின் புக்கட் நகர் மிருகக்காட்சிச்சாலையில் வித்தியாசமாகக் கொண்டாடத் திட்டமிட்டனர்.

இதன்படி திருமணத் தினத்தன்று இருவரும் குரங்குகள் போன்று மாறினர். மணமகன சேம்லேக், ஜிப்பான் குரங்கு போன்று குரல் எழுப்பினார். அப்போது ஒரு மரத்தின் கொப்பில தொங்கிக் கொண்டிருந்த மணமகள் நோக்க, பதிலுக்கு பெண் குரங்கு போன்று குரல் எழுப்பினார்.

பின்னர் அவர் அப்படியே காவி வந்து தரையில் நின்றிருந்த மணமகனின் தோளில் தாவினார். பின்னர் இருவரும் ஒறிஜினல் குரங்கு சேஷ்டைகளுடன் முறைப்படி திருமணம் செய்து கொண்டனர். இந்த வினோத மணமக்களுக்கு பரிசாக மிருகக் காட்சிச்சாலையிலிருந்த 4 ஜிப்பான் குரங்குகள் காட்டில் சுதந்திரமாக விடப்பட்டன. (ப)

# அரசு சமர்ப்பித்த பட்ஜெட் "டமார்" ஐந்து அமைச்சர்களின் சீட்டு "சறக்"

(ஜெருசலேம்)


இஸ்ரேல் அரசிலிருந்து, ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஷினுய் கட்சியைச் சேர்ந்த 5 அமைச்சர்களை பதவீ நீக்க பிரதமர் ஏரியல் சரோன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அரசு தாக்கல் செய்த 2005ஆம் ஆண்டு பட்ஜெட் இஸ்ரேல் நடாளுமன்றத்தில் புதன்கிழமை தோற்கடிக்கப்பட்டது.

பட்ஜெட் வாக்கெடுப்பின்போது 120 உறுப்பினர்களைக் கொண்ட இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் 69 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். 43 உறுப்பினர்கள் தான் ஆதரவாக வாக்களித்தனர். ஆளும் கூட்டணியில் இடம் பெற்றுள்ள இரண்டாவது பெரிய கட்சியான ஷினுய் கட்சி எதிர்த்து வாக்களித்ததால் அரசுக்கு இந்தத் தோல்வி ஏற்பட்டது.

இதையடுத்து அக்கட்சி சார்பில் அரசில் இடம்பெற்றுள்ள 5 அமைச்சர்களை டிஸ்மிஸ் செய்வதாக பிரதமர் சரோன் அறிவித்தார்.

பழமைவாத தோரா யூதயிசக் கட்சயின் ஐந்து உறுப்பினர்கள் ஆதரவைப் பெறுவதற்காக அக்கட்சிக்கு சரோன் அரசு ரூபா 297 கோடி தர முடிவெடுத்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பட்ஜெட்டை தோற்கடித்ததாக ஷினுய்கட்சி கூறியுள்ளது. (ப)




ஜப்பானைச் சேர்ந்த ஒலிம்பஸ் மெடிக்கல் சிஸ்டம்ஸ் கார்ப்பரேசன் நிறுவனம் 5 மில்லி மீற்றர் விட்டம் கொண்ட புதிய எண்டோஸ் கோபி மாத்திரை கமரா ஒன்றை வடிவமைத்துள்ளது.

இந்த மாத்திரையை நோயாளி உட்கொண்டவுடன் அது ஒரு மருத்துவர் போல் செயல்படுகிறது. வயிற்றின் பாதிக்கப்பட்ட பகுதியைத் தனது கமரா கண்களால் கண்டுபிடித்து அந்தப் பகுதிக்கு நேரடியாக மருந்தினை விநியோகிக்கிறது. பின்னர் மருத்துவ சோதனைக்காக பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து நீர், சதைதுகள்களை எடுத்துக்கொண்டு வெளியே வருகிறது.

# ஜெயேந்திரரைத் தொடரும் கொலைப் புகார்கள்?

ஆந்திராவில் காஞ்சி சங்கராச்சரியார் ஜெயேந்திரர் தங்கும் ஓய்வு விடுதியொன்றில்



பணியாற்றிய இரண்டு இளம் பெண்கள் மர்மான முறையில் கொலை செய்யப்பட்டது குறித்து விசாரணை நடத்த வேண்டுமென்று புதுக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் வேதம்படிக்க சங்கர மடத்துக்கு வந்தபோது மர்மமான முறையில் இறந்தது குறித்தும் விசாரணை நடத்துமாறும் அவரது உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

புகழ்பெற்ற காஞ்சி சங்கர மாடத்தைத் தொடர்புபடுத்தி அடிக்கடி மர்மக் கொலைச் செய்திகள் வருவதையடுத்துப் பக்தர்களிடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

காஞ்சி வரதாரஜப் பொருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் படுகொலை, மற்றும் கண்காய்வாளர் இராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்குகளில் ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டு, வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அர்ச்சகர் மாதவன் தாக்கப்பட்ட வழக்கில் ஜெயேந்திரருக்கு உள்ள தொடர்பு குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இந்நிலையில் 1985 ஆம் ஆண்டு காஞ்சி சங்கர மடத்தில் வேதம் படித்துவந்த கேகலன் நம்பூதிரி, கொம்பன் குளம் சங்கரன் ஆகிய இரு கேரள மாணவர்களின் மர்ம மரணம் குறித்து விசாரணை நடத்துமாறு அவரது குடும்பத்தினர் கோரியிருந்தனர். இதைத் தொடர்ந்து கடலூர் கூடுதல் டி.எஸ்.பி.சத்திய நாராயணன் தலைமையில் 4பேர் கொண்ட தனிப்படைப் பொலிஸார் கேரளத்துக்குச் சென்றனர். கேசவனின் சொந்த ஊரில் அவனது உறவினர்களிடம் விசாரணை நடத்தினர். இவ்வளவு காலத்துக்குப் பிறகாவது விசாரணை தொடங்கியிருப்பது ஆறுதல் அளிப்பதாக கேசவனின் சகோதரர் ஈஸ்வரன் நம்பூதிரி தெரிவித்தார்.

ஆந்திராவைச் சேர்ந்த ஐயப்பன் சர்மா என்ற இளைஞன் மரணத்திலும் ஜெயேந்திரருக்குத் தொடர்பு இருக்கக் கூடும் என்று அவனது பெற்றோர் சந்தேகம் தெரிவித்துள்ளனர். கடந்த ஏப்ரல் மாதம் காஞ்சியில் நடந்த வேதமகா சபைக் கூட்டத்தில் பங்கேற்கவந்த ஐயப்பன் சர்மா கோலில் தாமரைக்குளத்தில் பிணமாக மிதந்ததன் பின்னணியில் மர்மம் இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். இந்நிலையில் 1994 ஆம் ஆண்டு சங்கரமடத்தில் வேதம்படிக்க வந்த திருச்சி கோமரசன் பேட்டையைச் சேர்ந்த மாணவன் நாகசுப்பிரமணியன் குளத்தில் பிணமாக மிதந்ததிலும் மர்மம் இருப்பதாக அவரது உறவினர்கள் கூறியுள்ளனர். அவரது மரணம் குறித்து விசாரணை நடத்த வேண்டு மென்று அவர்கள் காஞ்சிபுரம் பொலிஸில் மனுக்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் ஆந்திரமாநிலம் மெகவுட் நகரைச்சேர்ந்த தெங்கூர் சீனிவாசன் என்பவர் காஞ்சிபுரம் பொலிஸுக்கு 'பாக்ஸ்' மூலம் ஒரு புகார் அனுப்பியுள்ளார். அதில் ஜெயேந்திரர் வழக்கமாகத் தங்கும் சூரிய லட்சுமி பவனத்தின் ஓய்வு விடுதியில் கடந்த 1998ஆம் ஆண்டு அங்கு பணிபுரிந்த இளம் பெண்கள் இருவர் மர்மமாகக் கொலை செய்யப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். இதுபற்றி ஆந்திரப் பொலிஸார் சரிவர விசாரிக்கவில்லையென்றும் இதில் ஜெயேந்திரருக்குத் தொடர்பு உள்ளதா என்பது பற்றித் தனிப்படைப் பொலிஸார் விசாரிக்க வேண்டுமென்றும் சீனிவாசன் கோரியுள்ளார்.

சங்கர மடத்தைத் தொடர்புபடுத்தி அடுத்தடுத்து புதிது புதிதாய் மர்மக் கொலைச் செய்துகள் வருவது குறித்து பக்தர்களிடையே அச்சமும் பீதியும் ஏற்பட்டிருக்கிறது. (து)

## சதுர்வேதி சாமியார் அமெரிக்காவுக்கு தப்பியோட முயற்சி

பண மோசடி முதலிய பல ஊழல் குற்றச்சாட்டுக்களில் சிக்கியுள்ள சதுர்வேதி சாமியார் அமெரிக்காவுக்குத் தப்பியோடத் திட்டமிட்டிருந்த இரகசியத் தகவலைத் தமிழகப் பொலிஸார் பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

சதுர்வேதி சாமியாரைக் காவலில் வைத்துள்ள பொலிஸார் நேற்று முன்தினம் அவரை தியாகராஜ நகரிலுள்ள வங்கியொன்றுக்கு அழைத்துச்சென்று அங்குள்ள அவரது 'லொக்கர்களை' திறந்து சோதனை செய்து அதிலிருந்து 10 இலட்சம் ரூபா மதிப்புள்ள வைரம் மற்றும் தங்க நகைகளைப் பறிமுதல் செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களில் பஞ்சாயத்து மாலை, தங்க டம்ளர், தங்கப் பூணூல், தங்க அரைஞாண் கயிறு உள்ளிட்டவை அடங்கும். மேலும் சென்னை ஆழ்வார் திருநகர், காஞ்சிபுரம், கோவை, மைசூர், ஹைதரபாத் ஆகிய இடங்களில் சதுர்வேதிச் சாமியாருக்குச் சொந்தமாகவுள்ள வீடுகள் மற்றும் நிலங்களுக்கான ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (து)

## உஷாவை கைதுசெய்ய ஆந்திரப் பொலிஸ் விரைவு

போலி ஆவணங்களைக் காட்டி 30 இலட்சம் ரூபா வங்கிக்கடன் பெற்ற வழக்கில் ஸ்ரீரங்கம் உஷாவைக் கைது செய்ய ஆந்திரப் பொலிஸார் விரைந்து வருகின்றனர்.

கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சங்கராச்சாரியார் ஜெயேந்திரருடன் நெருக்கமாகப் பழகியதாகக் கூறப்படும் உஷாவுக்கும் நாராயணன் என்பவருக்கும் கடந்த 1996 ஆந்திர மாநிலம் காளத்தியில் திருமணம்நடந்தது. இதையடுத்து இரண்டுமுறை காளத்து வந்த ஜெயேந்திரர் உஷாவின் வீட்டில் தங்கியதாகக் கூறப்படுகிறது. இவர்களின் கட்டுமான நிறுவனமொன்றை ஜெயேந்திரரே தொடக்கி வைத்து ஆசிவழங்கினார்.

இந்த நிறுவனத்துக்காகப் போலி ஆவணங்களைக் காட்டி அங்குள்ள பாரத்ஸ்டேட் வங்கிக் கிளையில் உஷாவும், அவரது கணவன் நாராயணனும் 30 இலட்சம் ரூபா கடன் வாங்கியதாக வங்கி மேலாளர் தெரிவித்தார்.

வங்கிக்கடனைக் கட்டாமல் இருவரும் தலைமறைவாகி விட்டனர். கடந்த ஆண்டு கைது செய்யப்பட்ட நாராயணன் பிணையில் விடுதலையாகி மீண்டும்



தலைமறைவாகிவிட்டார். இந்நிலையில் ஸ்ரீரங்கம் உஷா ஜெயேந்திரர் கொலை வழக்குச் சம்பந்தமாக பொலிஸ் விசாரணைக்கு ஆஜரான விபரம் ஆந்திரப் பொலிஸாருக்குக் கிடைத்ததையடுத்து, உஷாவைக் கைது செய்யத் தமிழகப் பொலிஸின் உதவியைக் கேட்டிருப்பதாக காவல் துறை தெரிவித்துள்ளது.(து)


பால், பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான செயற்பாட்டுக் குழு, யாழ்ப்பாணம்

(Sexual Gender Based Violence Working Group Jaffna)

நடாத்தும்

இளம் படைப்பாளிகளிற்கான திறன் வெளிக்கொணர் போட்டிகள்

போட்டிகள்:

1. சுவரொட்டி வரைதல்
2. கட்டுரை ஆக்கம்

பங்குபற்றுவோர் வயதெல்லை: 13 முதல் 19 வரை

தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று படைப்பாளிகளுக்கு உயரிய பெறுமதி மிக்க பரிசுகளும், தெரிவுசெய்யப்படும் சிறந்த 10 படைப்பாளிகளிற்கு ஆறுதல் பரிசில்களும், பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

(தெரிவுக்குழுவினரின் தீர்ப்பே இறுதியானது)

ஆக்கங்களுக்கான நிபந்தனைகள்:

☐ ஆக்கங்கள் அனைத்தும் சொந்தமானதாக இருத்தல் வேண்டும்.
☐ மேற்கூறிய நிபந்தனைகளுக்கு உட்பட்டவரென பாடசாலை அதிபரினால் அல்லது படைப்பாளியின் எல்லைக்குட்பட்ட கிராம உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப் படுதல் வேண்டும்.

சுவரொட்டி வரைதல்
12'' X15'' அளவு.
விடயம் : பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்போம்.
(திறந்த தலைப்பு)

கட்டுரை ஆக்கம்
ஆக்கம்: 300 சொற்களிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

தலைப்புகள்:
1. வன்முறைகளற்ற சமுதாயத்தில் பெண்கள்...
2. நாளைய பெண்கள் சுயமாக வாழ...
3. தொழில் நிலையில் யாழ்ப்பாணப் பெண்கள்...
4. கலாசார விழுமியங்களின் பிடியில் பெண்கள்...
5. கிராமிய மட்டத்தில் பெண்களின் நிலை...

ஆக்கங்கள் கிடைக்கவேண்டிய கடைசித் திகதி: 10 டிசம்பர்,2004

அனுப்ப வேண்டிய முகவரி : யு.என்.எச்.சி.ஆர்.
223, கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(C/813)

ஆக்கங்களை சமர்ப்பிப்போர் தமது பெயரையும் முகவரியையும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். ஆக்கங்கள் தபால் மூலமாகவோ, நேரிலோ சமர்ப்பிக்கலாம். சமர்ப்பிக்கப்படும் தபால் உறையின் இடது மூலையில் "இளம் படைப்பாளிகளுக்கான திறன் வெளிக்கொணர்தல்" எனக் குறிப்பிடவும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்போம்


## வட இலங்கை சங்கீதசபை தேர்வு; விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கைச் சங்கீத சபைத் தேர்வுகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. மேற்படி தேர்வுகளுக்குரிய விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முடிவுத் தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக வட இலங்கைச் சங்கீதசபை அறிவித்துள்ளது.

திருமுறைப் பண்ணிசை, வாய்ப்பாட்டு, வயலின், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், பரதம் மற்றும் கதகளி ஆகிய பாடங்களுடன் இவ்வாண்டு புதிதாக தவில், நாதஸ்வரம், ஹார்மோனியம் ஆகிய பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத் தேர்வு நாடிகள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் அமைந்துள்ள வட இலங்கைச் சங்கீத சபைப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிமாவட்டத் தேர்வுநாடிகள் தமக்கு வேண்டிய விண்ணப்பப் படிவங்களை அவ்வப் பகுதி இணைப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஊடகவியலாளர்கள் களப்பலியாவது சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் தான்

அரியநேந்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி காலத்தில் யாழ்ப்பாணத்தில் துணிச்சலுடன் செயற்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை செய்யப்பட்டார். இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிப் பீடமேறிய ஒரு மாதத்திற்குள் மட்டக்களப்பு ஊடகவியலாளர் ஜி.நடேசன் கொலை செய்யப்பட்டார். சந்திரிகா அம்மையாரின் ஆட்சியிலேயே ஊடகவியலாளர்கள் இவ்வாறு களப்பலி ஆகியுள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் பாராளுமன்றில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சின் குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், அரச ஊடகங்கள் தமிழ் மக்களின் வாழ்க்கையுடன் விளையாடுகிறது. சமாதானத்தின் எதிரியாக அவை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தென்றல் சேவையில் ஒலிபரப்புச் செய்யப்படும் "இதயவீணை" என்ற நிகழ்ச்சி ஊடாக பச்சைபொய்கள் கூறப்படுகின்றன. இது சமாதானத்துக்கு எதிராக விதைக்கப்படுகிறது என்றார். (ற-4)

## கண்டெடுப்பு


மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தவவிநாயகம் பிரசன்னா என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு "வலம்புரிக்" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும். (ற)

# நவீன கவிதை உலகில் ஒரு திருப்புமுனை

# அகியோபியின் 'கவிவானம்பொழிகிறது'

## திறனாய்வுக்களம்




**நூல் :— கவிவானம் பொழிகிறது**
**நூலாசிரியர் :— அகியோபி**
**விலை :— ரூ.150/=**

வசிட்டரின் வாயால் பிரமம் ரிஷிப்பட்டம் பெறுவது மாபெரும் பாக்கியம் எனக் கூறுவார்கள். அதேபோலத் தான் ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவரான இ.முருகையனின் அணிந்துரையைத் தமது ''கவிவானம் பொழிகிறது'' என்ற கவிதைத் தொகுதிக்குப் பெற்றதன் மூலம் கவிஞர் அகியோபயும் அத்தகைய பாக்கியவான்களில் ஒருவராகிறார்.

உள்ளத்தில் ஊறியெழும் உணர்ச்சிகளின் உருவம் தான் கவிதை என்பதை அவரது கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகள் ஒவ்வொன்றையும் படிக்கும் போது உணர முடிகிறது.

'கவிவானப் பொழிவு - என்
நெடுங்காலக்
கவித்தாகத் தணிப்பு
.........................
நான் எழுதுவேன் எதை
வேண்டுமானாலும் அல்ல;
நாட்டுக்கு நன்மை தருபன
வற்றை
நம்மவர்க்கு நம்பிக்கை
தருபனவற்றை
நலமாக இவ்வையம்
வாழும் வழிகளை
நற்றமிழில் நான் எழுது
வேன்...''

என்ற கவிஞரின் இதய தாகம் அவரது கவிதைகளில் விரவிக் கிடப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

ஜரோப்பிய வீதி எங்கும்
அரை மீற்றர் துணியோட
லையலாம்
அங்குமிங்குமாய் ஆடை
களைக் கிழித்து விட்டு
அதுதான் 'பாஷன்' என்று
கூறலாம்
அருந்தமிழ்ப் பண்பாடு
வளருமிங்கு
அவ்வாடைகள் எதற்கு''

என நவீன கால யுவதிகளின் நாகரிகப் போக்கைக் கடுமையாகச் சாடுகிறார்.

'வானமும் பூமியும் வாய் பேசாதா' என்ற கவிதையில்

'பள்ளியில் என்னோடு
துள்ளி விளையாடியவன்
சந்தியில் என்னோடு கூடி
நின்று பல சங்கதி பேசிய
வன்'

எங்கே? எங்கே? என் நண்பன் எங்கே? எனப் புலம்புவது ஆயிரமாயிரம் உள்ளங்களின் ஏங்கத்தைப் பிரதிபலிக்கும் புலம்பல் எனச் சொல்லாமலே விளங்குகிறது.

அந்நிய நாட்டிலே ஊனுறக்கமின்றி இரவு, பகலாகப் பாடுபட்டுழைக்கும் பிள்ளை அனுப்பும பணத்தை ஊதாரித்தனமாக வாரி இறைத்து விட்டு மேலும் 'பத்தாது பத்தாது என்று அடிவயிறு பத்த' பணததை அனுப்புமாறு தொந்தரவு செய்யும் பெற்றோர் பலரை அன்றாடம் பார்த்த அனுபவத்தை,

'வெள்ளையன் வீதி
யெங்கும்
விடிய விடிய வியர்வைத்
துளிகளை
கொள்ளை கொள்ளை
டொலர்களாக்கி வாரிவாரி
அனுப்புகிறான் பிள்ளை!
உறக்கத்தைச் சுருக்கி
உழைப்பை நீட்டி
உழைத்துக் களைத்து
அனுப்புகிறான் பிள்ளை!
இங்கு நடப்பதெல்லாம்
இந்திர போகம் தானே? எனக்
கண்ணீர் வடிக்கிறது 'அவர்
கள் தியாகம் அறிவாரா' என்

னும் கவிதை.

வெட்கம்! வெட்கம் என்ற கவிதையில்

'இந்த மண் ஏன் அழுதது?
இருபத்திநாலு மணி நேர
மின் விநியோகத் திற்
காகவா?
ஏ-9 நெடுஞ்சாலை திறப்
பிற்காகவா?

எனக் கேட்கும் கவிஞர்

'இந்த மண் ஏன் இரத்தம் சிந்
தியது? எனக் கேட்கும்
கேள்விக்கு யாரால் பதிலி
றுக்க இயலும்?'

எழுதுவதெல்லாம் கவிதைகள் தாம் என்ற எண்ணம் பரவலாக வளர்ந்துள்ள இக் காலகட்டத்தில் குறைந்தபட்சம் ஓசை அமைதியுடைய கவிதைகளைக்கூட காண்பது அரிது.

ஓசை அமைதியும், சொல்

**நல்லை மன்னன்**

நயமும் பொருள் நயமும் கொண்ட அகியோபியின் இக் கவிதைத் தொகுதி இன்றைய கவிதை உலகில் ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது சற்றே மகிழ்ச்சியளிக்கும் விடயம். □

# பொருட்களின் விலை அதிகரிப்புக்கு நிதியமைச்சர் நியாயம் கூறமுடியுமா?

(கொழும்பு)

வரவு - செலவுத் திட்ட மூலம மேலதிகமாக கட்டணங்களையும் வரிகளையும் மக்கள் மீது அரசாங்கம் சுமந்தியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த வரவு - செலவுத்திட்ட ஆலோசனைகளின் படி ஆண்டு தோறும் ஒவ்வொருவரும் 2 ஆயிரத்து 923 ரூபாவை வரிப்பணமாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் புத்தாண்டின் போது அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும். இது தொடர்பாக பகிரங்கத் தொலைக்காட்சி விவாதத்தில் நிதியமைச்சர் சரத் அமுனுகம பொருட்களின் விலை அதிகரிப்புக்கு நியாயம் கூறமுடியுமா? என வினாவெழுப்பிய பந்துல குணவர்த்தன, அரசாங்கம் முதலாளித்துவ வர்க்கத்திற்கு வரிச் சலுகைகளை வழங்கியுள்ளதாகவும் சுட்டிக் காட்டினார். (ற-8)

# பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

பாற்பண்ணை உற்பத்தியில் எமது நாடு எதிர்வரும் 4 ஆண்டுகளில் தன்னிறவைப் பெறும் என அமைச்சர் அனுரகுமார திஸ்ஸநாயக்க நம்பிக்கை தெரிவித்தார்.

இதற்குரிய திட்டங்களை உருவாக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை, பாற்பொருட்களுக்கு வெளிநாடுகளிலேயே முழுமையாக தங்கியிருக்கின்றது. இதனால் பெருமளவு பணம் பாற்பொருட்களின் இறக்கு மதிக்காக செலவிடப்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் உள்ள நாட்டில் இருக்கும் பாற்பண்ணைகளை முழுமையாக விருத்தி செய்வதற்கும் அவற்றின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அனுரகுமார திஸ்ஸநாயக்க கூறினார். (க-9)

# ஹர்த்தால் நடவடிக்கைகளுக்கு விடுதலைப் புலிகளே காரணம்

## இராணுவப் பேச்சாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்களைப் பயமுறுத்தி ஹர்த்தால் நடவடிக்கைகளிலும் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுமாறு விடுதலைப் புலிகளே வலியுறுத்தியதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்நாயக்க நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் சுமுக நிலையைப் பாதிப்படையச் செய்வதற்கு விடுதலைப் புலிகள் முயன்றுள்ளமை புலனாய்வின் மூலம் தமகுத் தெரியவந்ததையடுத்து விபரீதங்கள் ஏற்படக்கூடாது என்பதற்காகவே நாம் எமது சோதனைச் சாவடிகளை முடினோம்.

அதேபோன்று, நெஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும் இவ்வாறான தகவல் கிடைத்தமையினால் அவர்கள் தமது இடை நிலையங்களினை மூடினர். இதனால் 15 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டதுடன்,

ஆயிரத்து 500 வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடமுடியாமல் பாதிக்கப்பட்டன எனவும் பிரிகேடியர் தயா ரட்நாயக்க மேலும் சுட்டிக்காட்டினார்.(ற-4)

# கொக்குவிலில் திருட்டு

## 65 பவுண் நகைகள் மாயம்

(கோண்டாவில்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு எதிரே அமைந்துள்ள கோணாவில் ஒழுங்கையில் அமைந்துள்ள வீடு ஒன்றில் திருட்டுப் போயுள்ளது.

கடந்த புதன் இரவு இடம் பெற்ற இத்திருட்டுச்சம்பவத்தில் சுமார் 65 பவுண்எடை கொண்ட தங்க ஆபரணங்கள் களவாடப் பட்டதாகக் கோப்பாய் பொலிஸாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

கதவினை தாழ்போட்டு பூட்டிவிட்டு வீட்டினுள் உரிமையாளர்கள் நித்திரையில் இருந்த வேளையே இத்திருட்டு இடம் பெற்றுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் இது பற்றிப் பல முனைகளில் விசாரணை செய்து வருகின்றார். (ப-130)

# வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்

## மங்கள சமரவீர-விமல் வீரவன்ச கூட்டறிக்கை

(கொழும்பு)

நாட்டின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு மக்கள் ஆதரவு பெற்றதாக இந்த வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டம் மூலம் நாட்டின் சகல பிரசசினைகளையும் தீர்த்து வைக்கக் கூடியதாக இருக்குமென்று அமைச்சர் மங்கள சமரவீரவும் ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநத அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்ட ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த எதிர்தரப்பில் உள்ளவர்களின் ஆதரவினை அரசாங்கம் பெற்றுள்ளது. இதன் மூலம் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள விடயங்கள் மிகவிரைவில் நிறைவேற்றப்படும்.

இதேவேளை, வரவு - செலவுத திட்டத்துக்கு ஆதரவாக பெரும்பான்மையான மக்களின் ஆதரவினையும் அரசாங்கம் பெற்றுள்ளது. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு கிடைக்காது என்பது பாராளுமன்றத்தின் வரவு - செலவுத்திட்ட இரண்டாவது வாசிப்பு விவாதத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சமுகமளிக்காதன் மூலம வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது. அதேநேரம் ரணில் விக்கிரமசிங்க வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக எந்தவிதக் கருத்துக்களையும் வெளியிட வில்லை.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தைப் பராமரிப்பதற்கு வசதி செய்து கொடுக்கும ஜனாதிபதியின் செல்வினம் சம்பந்தமான ஒதுக்கீடுகள் தொடர்பாக அக்கட்சி விசமத்தனமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அரசாங்கத்திற்கு எதிராக ஆட்சேபனை இயக்கங்களை மேற்கொள்ள நியாயமான காரணங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2,08)

## விசனம்

(கொழும்புத்துறை)

கசசேரி கிழக்கு வீதி படுமோசமாகச் சேதமடைந்த நிலையில உள்ளது.

இது குறித்துப் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.(ப-51)

# சமாதான நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டைப் பொறுத்து ஐ.தே.க. தனது பங்களிப்பை வழங்குமாம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பில் நிலவுகின்ற சந்தேகங்களைக் கைவிட்டுத் தெளிவான சிந்தையுடன் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டிய பொறுப்பு தற்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கே உள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே இந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கின்ற போது குறுகிய அரசியல் இலாபம் கருதிச் செயற்படாமல், தேசிய ரீதியில் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

அப்போதுதான் நிரந்தர சமாதானம் என்ற இலக்கை அடையமுடியும்.

ஜனாதிபதி இந்தப் பொறுப்பை நிறைவேற்றும் முறைக்கு அமைய, ஐக்கிய தேசியக் கட்சி தனது பிரதிபலிப்பை வெளிப்படுத்தும என்று அன்றைய செயற்குழுக் கூட்டதத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச் செயற்குழுக் கூட்டத்தில எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, சமாதான நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை குறித்து உரையாற்றியுள்ளார். (ற-8)

# சிறுவர் அரங்கம்


## நாயாரே



வள் வள் வள்
நாயாரே
வாலை ஆட்டும்
நாயாரே
என்னைப் பார்த்துச்
சிரிக்கின்றாய்
வீட்டைக் காத்துக்
கொள்கின்றாய்
நன்றியுள்ள மிருகமே
நான் உனக்கு
நண்பனே
என்னைக் காத்துக்
கொள்ள நீ
உன்னைக் காத்துக்
கொள்வேனே
நீயும் என்னுடன்
பேசினால்
எப்படி இருக்கும்
எம் உறவு
வீட்டைக் காத்துக்
கொள்வாய் நீ
உழைத்து வருவேன்
உண்பதற்காய்.

ச.சதீஸ்.

## உப்பு பற்றிய உண்மை



கடல்நீர் உப்பாக உள்ளதற்குப் பல கற்பனைக் கதைகள் வழக்கில் உள்ளன. உப்புக் கப்பல்கள் கவிழ்ந்ததால் நீர் உப்பானது எனவும் கூறுவது உண்டு! ஆனால் உண்மைக் காரணம், பல நதிகள் பல மலைகளிலிருந்து கிளம்பித் தம்மோடு அங்குள்ள உப்புகளையும், தாதுப்பொருட்களையும் எடுத்துவந்து கடலில் சேர்க்கின்றன. இவை நீரில் கரைந்தும் கடலடியில் தங்கியும் கடல் நீரை உப்பாக்குகின்றன. உப்பளப் பாத்திகளில் கடல் நீரை நிரப்பி சூரிய வெப்பத்தால் ஆவியாக்கி உப்பு தயாரிக்கப்படுவது இதை நிரூபிக்கிறது.

## பழைய பெயர் தெரியுமா?

| புதிய பெயர் | பழைய பெயர் | புதிய பெயர் | பழைய பெயர் |
|---|---|---|---|
| ஒஸ்லோ | கிறிஸ்டியானா | நாரு | பிளசன்ட் ஐலண்ட் |
| ஸ்டாலின் கிராட் | வொல்கோகிராட் | நமிபியா | தென்மேற்கு ஆபிரிக்கா |
| செயின்ட் பீட்டர்ஸ்பேர்க் | லெனின்கிராட் | கயானா | பிரிட்டிஷ் கயானா |
| தைவான் | ∴போர்மோஸா | கானா | கோல்ட்கோஸ்ட் |
| தாய்லாந்து | சியாம் | எத்தியோப்பியா | அபிசீனியா |
| ஸாயர் | கொஸ்கோ | ஜிபுட்டி | பிரெஞ்சு சோமலிலாண்ட் |
| ஸாம்பியா | வடரொடீசியா | பொட்ஸ்வானா | பெச்சுவானாலாண்ட் |
| சிம்பாப்வே | தென்ரொடீசியா | ஹோசிமின் சிட்டி | சைகொன் |

## நல்ல தீர்ப்பு

வழக்கம்போல அரியணையில் அமர்ந்து அரசாட்சியைக் கவனித்துக்கொண்டிருந்தான் அரசன் ஒருவன்.

அப்பொழுது அங்கு வந்த பெண்மணி ஒருத்தி, ''அரசே! நான் எண்ணெய் விற்ற பத்து வெள்ளிக்காசுகளை யாரோ திருடி விட்டார்கள். நீங்கள்தான் திருடனைக் கண்டுபிடித்து என்



பணத்தை மீட்டுத்தரவேண்டும்'' என்று முறையிட்டாள்.

''திருடனை எளிதாகக் கண்டுபிடித்துவிடலாம். உன் பணம் உனக்குக் கிடைத்துவிடும். கவலைப்படாதே'' என்றான் அரசன்.

வீரர்களை அழைத்த அரசன், ''நீங்கள் நகரம் முழுவதும் சோதனை இடுங்கள். ஒருவர்கூட விடுபடக்கூடாது. எவனிடம் பத்து வெள்ளிக்காசு இருக்கிறதோ அவனே திருடன். அவனை இழுத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டான்.

வீரர்கள் நகரம் முழுவதும் சோதனை செய்தார்கள். அவர்கள் இருபதுபேரை அரண்மனைக்கு இழுத்து வந்தார்கள்.

''அரசே! இவர்கள் ஒவ்வொருவரிடமும் பத்து வெள்ளிக்காசுகள் இருந்தன. அதனால் இழுத்துவந்தோம். பணம் இவர்களிடமே இருக்கிறது'' என்றான் வீரர்களின் தலைவன்.

அவர்களைப் பார்த்து அரசன் திகைத்தான். 'யாரோ ஒருவன் தான் பிடிபடுவான். எளிதாகத் திருடனைக் கண்டுபிடித்துவிடலாம் என்று நினைத்தேனே. இவர்களில் யார் திருடன் என்று எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்று குழம்பினான் அரசன்.

அருகிலிருந்த அமைச்சரைப் பார்த்து, ''ஒரே குழப்பமாக உள்ளது. இவர்களில் உண்மையான திருடன் யார்? உன்னால் கண்டுபிடிக்க இயலுமா?'' என்று கேட்டான் அரசன்.

''முடியும்'' என்றான் அமைச்சர்.

''நீர் மட்டும் உண்மையான திருடனைக் கண்டுபிடித்துவிட்டால் உமது அறிவுக்கூர்மையைப் பாராட்டி நான் அணிந்திருக்கும் இந்த முத்துமாலையைப் பரிசாகத் தருகிறேன்'' என்றான் அரசன்.

வீரர்களைப் பார்த்து அமைச்சர், ''நீங்கள் ஒரு பாத்திரத்தில் கொதிக்கக் கொதிக்க வெந்நீரைக் கொண்டு வாருங்கள்'' என்று கட்டளையிட்டார்.

சிறிதுநேரத்தில் பெரிய பாத்திரத்தில் வெந்நீர் கொண்டு வந்து அங்கே வைக்கப்பட்டது.

இழுத்துவரப்பட்ட இருபது பேரையும் பார்த்தார் அமைச்சர். ''நீங்கள் ஒவ்வொருவரும் உங்களிடம் உள்ள பத்து வெள்ளிக் காசுகளை வரிசையாக இந்த வெந்நீரில் போடுங்கள்'' என்றார் அமைச்சர்.

அப்படியே ஒவ்வொருவரும் போட்டுக் கொண்டே வந்தனர். அந்த வெந்நீரையே பார்த்துக் கொண்டிருந்தார் அமைச்சர்.

அவர்களில் ஒருவன் வெள்ளிக் காசுகளைப் போட்டவுடன், ''இவன்தான் திருடன்'' என்றார் அமைச்சர்.

முதலில் ''நான் திருடனில்லை'' என்று மறுத்தான் காசுகளைப் போட்டவன்.

''நீ உண்மையை ஒப்புக் கொள்ளாவிட்டால் உனக்குக் கடுந் தண்டனை கிடைக்கும்'' என்று மிரட்டினார் அமைச்சர்.

தண்டனைக்குப் பயந்த அவனும் தான் திருடியதை ஒப்புக் கொண்டான்.

நடந்ததை எல்லாம் பார்த்த அரசன் வியப்படைந்தான்.

அமைச்சரைப் பார்த்து ''வெந்நீரைக் கொண்டு உண்மையான திருடனை நீர் எப்படிக் கண்டுபிடித்தீர்?'' என்று கேட்டான்.

''அரசே! எண்ணெய் விற்றதனால் கிடைத்த காசுகளில் எப்படியும் எண்ணெய் சிறிதளவாவது ஒட்டியிருக்கும். அந்தக் காசுகள் வெந்நீருக்குள் விழுந்தால் அவற்றில் ஒட்டியுள்ள எண்ணெய்த் துளிகள் மேலே மிதக்கும் என்று நினைத்தேன். இவன் காசுகளைப் போட்டதும் எண்ணெய்த்துளிகள் மேலே மிதந்தன. அதனால் இவன்தான் திருடியிருக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்'' என்று நடந்ததை விளக்கினார் அமைச்சர்.

மகிழ்ந்த அரசன் தான் அணிந்திருந்த முத்துமாலையாயை அமைச்சருக்குப் பரிசாகத் தந்து பாராட்டினார்.

## நகைச்சுவை வினாக்கள்

01. ஒரு ஆங்கில மாதமும், ஒரு தமிழ் மாதமும் இணைந்தால்தான் ஒரு அறிஞர் உருவாகிறார் எப்படி?
02. புகையைக் கக்கும் பிராணி எது?
03. வெற்றிலையில் உள்ள கல் என்ன கல்?
04. எந்தச் சோலையில் பூ பூக்காது?
05. எந்தச் சங்கத்தில் அங்கத்தவர் ஆகமுடியாது?
06. காசில்லாமலே பலருக்கும் தெரிய வரும் தந்தி எது?


## பொது அறிவு

01. செஞ்சிலுவைச்சங்கத்தை ஆரம்பித்தவர் யார்?
02. பூமி உருண்டையானது என முதன் முதலாக வாதம்புரிந்தவர் யார்?
03. சந்திரனுக்குத் தானே ஒளிவிடும் சக்தி இல்லை என முதலில் கூறியவர் யார்?
04. மிகப்பெரிய ஆபிரிக்க நாடு எது?
05. ஒரு மாதத்திற்கு மட்டும் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் யார்?

ம.தர்சினி.

## கண்டுபிடியுங்கள்

இவையெல்லாம் என்னவென்று யோசிக்கவேண்டாம். பறக்கும் தட்டுகள்தான் இவை. இங்கே மொத்தம் எத்தனை பறக்கும் தட்டுகள் உள்ளன என விரைவாக எண்ணிக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?



### விடைகள்

நகைச்சுவை
1.May - தை 2.சாம்பிராணி 3.அழுகல் 4.காசோலையில் 5.பிரசங்கத்தில் 6.வதந்தி.

பொது அறிவு
1.ஹென்றி டு பாண்ட்
2.பிதாகரஸ்
3.அனாக்ஸா கோராஸ்
4.சூடான்
5. வில்லியம் ஹென்றி ஹாரிசன்

கண்டுபிடியுங்கள்
43தட்டுக்கள்

# நடுவருடன் வாக்குவாதம்
# சௌரவ் கங்குலிக்கு அபராதம்

நடுவரின் முடிவுக்கு அதிருப்தி தெரிவித்ததன் காரணமாக இந்திய கிரிக்கெற் அணித்




தலைவர் சௌரவ் கங்குலிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முடிவடைந்த இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டத்தின் போது தென்னாபிரிக்க வீரர் ஜக்கலிஸ் அடித்த பந்தொன்று துடுப்பிலும் கால் காப்பிலும் பட்டு பிடியாக அமைந்தது. ஆனால் அது கால் காப்பில் மட்டுமே தான் பட்டதெனவும் துடுப்பில் படவில்லையெனவும் கூறி அதை ஒரு பிடியாகக் கருத முடியாதென நடுவர் டெரல் ஹார்பர், இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலியின் ஆட்டமிழப்புக் கோரிக்கையை நிராகரித்தார்.

நடுவரின் இந்த நிராகரிப்பால் அதிருப்தி அடைந்த கங்குலி அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இது குறித்து ஐ.சி.சி. நடுவர் ஜெப்குரோவிடம் புகார் செய்யப்பட்டது. நடுவரிடம் கங்குலி தவறான முறையில் நடந்து கொண்டதாக அப்புகாரில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்புகாரை விசாரித்த ஐ.சி.சி. நடுவர் ஜெப்குரோ, கங்குலிக்கு இப்போட்டிக்கான ஊதியத்தில் 30 வீதத்தை அபராதமாக விதித்தார்.

தொலைக்காட்சியில் அப்பிடி எடுப்பு ஆட்டமிழப்பு எனத் தெளிவாகத் தெரிந்தபோதும் நடுவர் டெரல் ஹார்பர் அதனை நிராகரித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதன் காரணமாகவே கங்குலிக்கு அபராதம் வி[illegible]கப்பட்டது.

(து-7)


## செஸ் சம்பியன் ஹரிக்கு ஆந்திர அரசு பரிசு

இந்தியாவின் கேரள மாநிலத்தின் கொச்சியில் அண்மையில் நடந்து முடிந்த உலக ஜுனியர் செஸ் சம்பியன் பட்டம் வென்ற ஆந்திரப் பிரதேச செஸ் ஆட்டக்காரர் ஹரி கிருஷ்ணாவுக்கு 2 இலட்சம் ரூபா பரிசு வழங்கிக் கௌரவித்திருக்கிறது அம் மாநில அரசு.

ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி, ஹரி கிருஷ்ணாவுக்கு இப்பரிசை வழங்கியதுடன் தனது பாராட்டையும் தெரிவித்தார்.

அத்துடன் கிரீஸில் நடைபெற்ற 14 வயதுக்குட்பட்டோருக்கான உலக யுத் செஸ் சம்பியன் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ஹரிகா என்ற வீராங்கனைக்கும் ஆந்திர முதல்வர் 2 இலட்சம் ரூபா பரிசளித்தார்.

(து-7)



அமெரிக்க, லொஸ் ஏஞ்சலீஸின், லொஸ் ஏஞ்சலீஸ் கிளிப்பேர்ஸ் அணிக்கும் பிரிட்டனின் இன்டியானா பேஷர்ஸ் டிரைவ்ஸ் அணிக்கும் இடையே நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் இன்டியானா வீரர் ஜோன்சன் பந்தை கூடைக்குள் போடும் காட்சி.

## தென்னாபிரிக்க வீரர் போலக் கிரிக்கெற்றில் இரட்டைச் சாதனை

தென்னாபிரிக்க கிரிக்கெற் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் ஷேன் போலக் அபூர்வமான இரட்டைச் சாதனையைப் படைத்திருக்கிறார்.

கொல் கத்தா, ஈடன்கார்டன் மைதானத்தில் நடந்த போட்டியில், டெஸ்ட் போட்டிகளில் 3 ஆயிரம் ஓட்டங்கள் குவித்த சாதனையையும் 300 விக்கெற்றுக்கள் வீழ்த்திய மற்றொரு சாதனையையும் போலக் ஏற்படுத்தினார். தென்னாபிரிக்காவின் இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தில் போலக் 6 ஓட்டங்கள் மாத்திரமே எடுத்தபோதிலும் அந்த சாதனையை எட்டிப்பிடிக்க அதுவே கைகொடுத்தது.

கிரிக்கெற் உலகில் இத்தகைய சாதனையாளர்களான கபில்தேவ், இயன் பொதம், றிச்சட் ஹைட்லி, இம்ரான்கான் ஆகியோருடன் போலக்கும் தற்போது சேர்ந்திருக்கிறார். (து-7)

## விளையாட்டு செய்திகள்

## ஐ. சி. சி. தரவரிசையில் இந்தியாவுக்கு 3 ஆம் இடம்

சர்வதேச கிரிக்கெற் சபையின் தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி முதன் முறையாக மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

2001 ஆம் ஆண்டு ஐ.சி. சியால் அறிமுகப்படுத்தப்பட்ட டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் அவுஸ்திரேலிய அணி தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

நேற்று முன்தினம் முடிவடைந்த தென்னாபிரிக்காவுக்கான போட்டியில் வெற்றிபெற்று தொடரை வென்றதன் மூலம் இந்திய அணிக்கு 107 புள்ளிகள் கிடைத்துள்ளன. இதன் மூலம் இந்திய அணி முதன் முறையாக மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இரண்டாவது இடத்திலுள்ள இங்கிலாந்து அணி 109 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இந்தியாவை விட 2 புள்ளிகளே அது அதிகமாகப் பெற்றுள்ளது.

அடுத்து நடைபெறவுள்ள பங்களாதேஷ் அணிக்கெதிரான தொடரில் இந்திய அணி நிச்சயமாக வெற்றிபெறும். அப்போது இந்திய அணி இரண்டாவது இடத்துக்கு முன்னேற வாய்ப்புண்டு என நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பட்டியலில் 105 புள்ளிகளுடன் பாகிஸ்தான் அணி 4 ஆம் இடத்திலும், 103 புள்ளிகளுடன் இலங்கை அணி 5 ஆம் இடத்திலும் உள்ளன. (து-7)

# ஐம்பதிலும் திறமை வரும்

பிரேஸில் கால்பந்தாட்ட அணியின் முன்னாள் தலைவர் சோக்ரடீஸ் தனது 50ஆவது வயதில் மீண்டும் போட்டிகளில் விளையாட ஆரம்பித்துள்ளார்.

19-02-1954இல் பிறந்த சோக்ரடீஸ் பிரேஸில் அணிக்காக 60 போட்டிகளில் விளையாடியதுடன் மத்தியகள வீரராகச் சர்வதேசப் போட்டிகளில் 22 கோல்களை அடித்துள்ளார்.

1882 மற்றும் 1996ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிகளிலும் இவர் பங்குபற்றியுள்ளார்.

1982ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளின் போது பிரேஸில் அணிக்கு இவர் தலைமை தாங்கினார். 1990ஆம் ஆண்டில் தனது விளையாட்டின் இனிய நினைவுகளுடன் ஓய்வு பெற்றார்.

இப்போது இங்கிலாந்தின் சிறிய கழகங்களில் ஒன்றான 'கார்போர்த்' அணிக்காக மீண்டும் விளையாட ஒப்பந்தமாகியுள்ளார். அண்மையில் இக் கழகத்துக்காக டெட்காஸ்டர் யுனைட்டட் அணிக்கெதிரான போட்டியில் சோக்ரடீஸ் விளையாடியுள்ளார்.

'நான் அந்தக் காலத்தில் விளையாடியது போன்று தற்போது வேகமாக விளையாட முடியாது. ஆனால் சில தந்திரங்களை மீண்டும் 'செய்யமுடியும் எனப் பேட்டியொன்றில் அவர் கூறினார்.

எனினும், உதைபந்தாட்டப் போட்டியின் போது அப்பிராந்தியத்தின் கடுமையான குளிரை சமாளிக்கச் சிரமப்பட்ட சோக்ரடீஸ், போட்டியின் 78ஆவது நிமிடத்தில் களமிறக்கப்பட்டார்.

அப்போட்டியில் 20 யார் தூரத்திலிருந்து கோல் ஒன்றை அடிக்க அவர் முயற்சித்தபோதும் அது வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(து-4)

## பொலிஸாரின் ஆதரவுடன் கல்வியங்காட்டில் விழிப்புக்குழு

(கோண்டாவில்)

கல்வியங்காடு இராசபாதை வீதியில் அமைந்துள்ள முழுமதி சனசமூக நிலையத்தினர் விழிப்புக்குழு ஒன்றை அமைத்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வத்தின் ஆதரவுடன் அவ்வூர் இளைஞர்குழு இரவு 10 மணியில் இருந்து அதிகாலை 4 மணிவரை சுழற்சி முறையில் விழிப்புக்கடமையில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

கோப்பாய் பொலிஸ் பகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் அடிக்கடி இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காகவே பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இது செயல்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ப-130)

## வடபகுதிக் கடற்கரையோரங்களில் எண்ணெய் வள ஆராய்ச்சிகள் விரைவில் ஆரம்பமாகுமாம்!

(கொழும்பு)

நாட்டின் வடபகுதியில் உள்ள கடற்கரையோரப் பிரதேசங்களில் எண்ணெய்வளம் உள்ளதா? என்பதைக் கண்டறியும் நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்கப் போவதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

தமது இந்த நடவடிக்கைக்கு இந்தியாவில் உள்ள "ஓ.என்.ஜீ.சி." என்ற நிறுவனமும், ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்த கூட்டுத்தாபனத்தின் அதிகாரி ஒருவர்,

வங்காள விரிகுடாவில் உள்ள காவேருப்படுகையில் 5 கோடி பீப்பா வரையிலான மசகு எண்ணெய்ப் படிமங்கள் இருக்கும் என தமது ஸ்தாபனம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

(க-60)

# குருநகர் நிலைமையை அறிய ரவிராஜ் எம்.பி. நேரடி விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் நேற்று முன்தினம் குருநகருக்கு விஜயம் செய்தார். குருநகர் பகுதிகளுக்குச் சென்ற அவர் சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள மக்கள், கத்தோலிக்க மதகுருமார் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படைப் பிரிவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மக்களுக்கிடையிலான இந்தக் குழப்பத்தைப் பயன்படுத்தி இனவாதத்தைத் தூண்டும் சக்திகள் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது வீணான குற்றச்சாட்டுக்களை சுமத்த முற்படுவதாக ரவிராஜ் தெரிவித்தார்.

மக்களைக் குழப்பத்திற்குள் தள்ளி சமாதான நடவடிக்கைகளை மேலும் சிதைக்க அச் சக்திகள் முயற்சிக்கின்றன.

அத்துடன் இத்தகைய இனவாதக்கட்சிகள் அரச ஊடகங்களூடாக விடுதலைப்புலிகளுக்கு எதிராக விசமத்தனமான பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகின்றன என்றார்.

குருநகர், திருநகர் பிரச்சினைக்கும் மேற்படி கட்சிகளின் சூழ்ச்சியே மூலகாரணம்.

இதனை மக்கள் மத்தியிலும் மோதலில் ஈடுபட்ட இரு தரப்பினருக்கும் எடுத்துக் கூறவே தமிழ்க்கூட்டமைப்பின் சார்பில் நான் இங்கு வந்துள்ளேன்.

பாராளுமன்றில் எவ்வளவோ விவாதங்கள் வாக்கெடுப்புக்கள், இவற்றுக்கு மத்தியில் நான் இங்கு வந்துள்ளேன். குருநகர், திருநகர் சம்பவத்தை பேரினவாதிகளும்; துரோகக் கும்பல்களும் திரிபுபடுத்தாமலிருக்கவும் உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்குமாகவே நான் இங்கு வந்துள்ளேன் என்றார். தற்போதுள்ள இந்தச் சூழ்நிலையில் நாம் அனைவரும் பொறுமை காப்பது அவசியம்.

எங்களது உள்ளகப் பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தாமல் தேசியத்திற்கான ஒற்றுமையை வலியுறுத்தி நிற்க வேண்டும் என அவர் மக்களை வேண்டிக் கொண்டார்.

மாவீரர்நாள் நிகழ்ச்சிகளை குழப்ப முயன்று தோற்றுப் போயுள்ள பேரினவாதிகளும் துரோகக் கும்பல்களும் அப்பாவி மக்களின் இத்தகைய சிறு சிறு பிரச்சினைகளில் தலையிட்டு இயல்பு வாழ்க்கையைச் சீரழிக்க முயல்கின்றன.

இதற்கு நாம் பலியாகிவிடக் கூடாது. எனவே, சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் பொறுமை காத்து ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்றார். (க)

# குப்பைகளை அகற்றுவதிலுள்ள பிரச்சினைகள் குறித்து

## யாழ். மாநகரசபை ஆணையாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து கழிவுகள் மற்றும் குப்பைகள் அகற்றப்படுவதில்லையென்ற குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளித்து, யாழ்.மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

குப்பைகளை அகற்றுவதில் யாழ்.மாநகரசபை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விளக்கி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

யாழ்ப்பாண மாநகரசபைப் பிரிவில வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு குப்பைகள் நிரம்பி வழிகின்றன என்ற முறைப்பாடுகள் சரியானவை என்பது யாழ்ப்பாண மாநகரசபைக்கு நன்கு தெரியும். ஆனால் பின்வரும் காரணங்களால் முக்கியமான குப்பை கூழங்களை உடனுக்குடன் அகற்ற முடியாத நெருக்கடியில் மாநகர சபை சிக்கியுள்ளது.

★ மழைகாலமாதலால் வழமையான அளவு குப்பை கூழங்களிலும் பார்க்க மிகக் கூடுதலான அளவு குப்பைகள் குடியிருப்பாளர்களால் கொட்டப்படுகின்றன. வாழைத்தண்டுகள், பச்சை மரங்கள், இலைகுழைகள் என்பன இக் குடியிருபபாளர்களால் வீட்டுக்கு முன்பாக போடப்படுவதுடன், தத்தமது இடங்களில் குப்பைகளை இட முடியாத சில குடியிருப்பாளர்கள், தங்கள் குப்பைகளை மணம் எழுப்பக்கூடிய கழிவுப் பொருட்களுடன் இரவு நேரங்களில் வேறு ஒருவரின் வாசலில் கொட்டுகிறார்கள்.

### குப்பைகளை அகற்றுவதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினை

★ மாநகரசபையானது தனது ஒரு இலட்சம் மக்களின் வீட்டுக் குப்பைகளைக் கொட்டுவதற்காக காக்கைதீவில் 97 பரப்புக் காணியைத் தனது செலவில் கொளவனவு செய்துளளது. கடந்த 10 வருடங்களாக அந்த இடத்தில குப்பைகள் கொட்டப் பட்டு வந்தன. ஆனால் மிக அண்மைக்காலத்தில் அக் குப்பை கொட்டுமிடத்திற்கு முன்பாகவுள்ள வயல்க்காணியில் 25 குடும்பங்களுக்கான குடியேற்றத்திட்டத்தை உருவாக்கிய முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன், இந்தக் குடியேற்றத் திட்டத்திற்கு வரக்கூடிய எதிர் விளைவை மனதிற்கொள்ளவில்லை.

அதனால் அக்குடியேற்றத் திட்டத்திலுள்ள மக்கள் மாநகர சபைக்குச் சொந்தமான காக்கைதீவுக் காணியில் மாநகர சபைக் குப்பைகளைக் கொட்டுவதற்குத் தடைசெய்து மறியல் போராட்டம் நடாத்தித் தடுத்து விட்டார்கள். ஆதலால் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தற்காலிகமாக எடுக்கப்பட்ட ஒரு அரச காணியில் நீண்ட தூரம் பயணித்து தற்போது குப்பைகளைக் கொட்டவேண்டியுள்ளது. 20 டிராக்டர் லோட் வரையில் நாளாந்தம் எடுக்கப்படுகின்ற குப்பைகளின் அளவானது தற்போது 6 லோட்களாகக் குறைந்துள்ளது. இதற்குக் காரணம் நீண்ட தூரப் பயணமாகும். இப்போது தற்காலிகமாகக் குப்பைகள் கொட்டப்படுகின்ற புதிய இடத்திலும் குப்பைகளைக் கொட்டவேண்டாமென அண்மையிலுள்ள இராணுவ முகாமினரால் தடுக்கப்பட்டுள்ளது. அதனால் அதற்கப்பால் உள்ள வேறு இடத்திற்குக் குப்பைகளை எடுத்துச் செல்ல நேரிட்டுள்ளது.

★ காக்கைதீவு குப்பை கொட்டும் இடத்தைத் தடை செய்த அக் குடியிருப்பு மக்களுடன் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், ஒன்றரை மாதத் திற்கு முன் ஒரு கலந்துரையாடலினை நடாத்தினார். அக் கலந்துரையாடலில் வைத்தியசாலைக் கழிவுகளையும், கொல்களக் கழிவுகளையும் கொட்டுவதில்லை என்று உறுதிசெய்து வேறு சேதனக் கழிவுகளை மட்டுமே அவ்விடத்தில் கொட்டுவதென்றும் இணக்கம் காணப்பட்டது.

காக்கைதீவில் அவ்வாறு குப்பை கொட்டுவதாயின், குப்பை கொட்டுமிடத்திற்குத் தெளிவான எல்லையிட்டு வேலியமைக்க வேண்டும் என்றும் அதற்கு ஒரு காவலாளியை பணிக்கமர்த்த வேண்டுமென்றும் அக்குடியேற்ற மக்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் அதற்கும் இணக்கம் காணப்பட்டது. காவலாளியின் அவசியம் ஏன் ஏற்பட்டுள்ளதெனில் இரவுநேரங்களில் சில சமூகவிரோதிகள் இறந்த விலங்கு, பறவைகளின் எச்சங்களை லான்ட் மாஸ்ரரில் கொண்டு வந்து அவ்விடத்தில் வீசிவிட்டுச செல்கின்றனர் என்பதனாலாகும். அதனால், அக்குடியிருப்புத் திட்டத்திலுள்ள ஒருவரைத் தெரிவுசெய்து அவருக்கு மாதாந்த வேதனமாக 3 ஆயிரம ரூபா வழங்கி காவலாளியாக அமர்த்துவதற்கு சபைக் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. தற்போது இக் காக்கைதீவுக் காணிக்கு வேலியிடுகின்ற பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

★ அரசாங்க அதிபர் கல்லுண்டாய் வெளியில் 50 ஏக்கர் அரச நிலத்தினை எமது சபைக்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலரின அனுசரணையுடன் வழங்கியுள்ளார்.

இந் நிலத்திற்குச் செல்வதற்கு அக்காணிக்கும் வீதிக்கும் இடையில் அமைந்துள்ள கால்வாய் தடையாக அமைந்துள்ளதால் தற்போது அக்காணியையும், வீதியையும் இணைத்து மதகு ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

### மக்களுக்கான வேண்டுகோள்!

இந்நிலையில் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட கழிவுகளையும், குப்பைகளையும் டிசம்பர் மாதம் முடியும் வரை முழுமையாக அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதுள்ளது என்பதனை மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன். ஆதலால் கூடிய வரை வீட்டுக் குப்பைகளைத் தத்தமது வீட்டு வளவிற்குள்ளேயே புதைக்குமாறு அல்லது எரியூட்டுமாறு தயவாக வேண்டுகிறேன்.

அவ்வாறு செய்ய முடியாத பட்சத்தில உங்கள் வீடுகளுக்கு முன்பாக அவற்றை உரப்பையிலிட்டு வைக்குமாறும் அவற்றை வேறு வீட்டுக்கு முன் வைக்க வேண்டாம் என்றும் மனதார வேண்டுகின்றேன்.

### புத்தாண்டில் தீர்வு

★ புத்தாண்டில் யாழ்ப்பாண மாநகரசபையானது சிறந்த முறையில் குப்பை கூழங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது. இதற்கமைய, கிளிநொச்சி வன்னி வேளாண் வளப்பிரிவில் இருந்து 10 உழவு இயந்திர இழுவைப் பெட்டிகள் கொளவனவு செயயப்பட்டுள்ளன. அவற்றை விட தற்போது 7 டிராக்டர் வரையில் குப்பை கூழங்களை அகற்றும் வேலையில் ஈடுபட்டுள்ளன. ஜனவரி மாதத்தில் இருந்து இந்த டிராகடர் பெட்டிகளை இன்று நாம் வீதிக்கு வீதி சேகரித்துப் பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாகக் குவித்து வைத்திருக்கும் இரண்டாம் நிலை நிலையங்களில் அதிகாலை 6.00 மணிக்கு நிறுத்தி வைக்கவுள்ளோம்.

மாநகரசபைத் தொழிலாளர்கள் சென்று அவர்களது கை வண்டில்களில் சேகரித்து வரும் குப்பைகளை எடுத்துச் சென்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்த டிராக்டர் பெட்டிகளில் நிரப்புவார்கள்.

பொதுமக்களும் தங்களது குப்பைகளை அவ்விடத்திற்குத் தாமாகவே எடுத்துச் சென்று அவ் டிராக்டர் பெட்டிகளில் கொட்டலாம். இவ்வாறு 1ம், 2ம் தர நிலையங்களில் டிராக்டர் பெட்டிகளில் சேகரிக்கும் குப்பைகள் அன்றைய தினமே டிராக்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு உரிய இடங்களில் கொட்டப்படும்.

இவற்றோடு நகர சுற்றாடல் திட்டமிடல் முகாமைத்துவப் பிரிவுக்கான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கென நகர அபிவிருத்திக் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளது.

குப்பை கூழங்களைக் கொண்டு உரம் தயாரிக்கும் உரத்தொழிற்சாலை ஒன்றும் ஆரம்பிக்கப் படவிருக்கின்றது. அவற்றின் மிக முக்கிய பணியாக யாழ். மாநகரசபையினால் சேகரிக்கப்படும் 45 மெற்றிக்தொன் குப்பைகளைப் பயனுள்ள முறையில் பயன்படுத்துவதாகும்.

1000 பிளாஸ்ரிக் ஆர்பிகோ குப்பை கொட்டி வைக்கும் விசேட பரல்களும் 300 குப்பை போடும் சிறிய றம்களும் வழங்கப்படவுள்ளன. அவை யாழ். நகரக் குடியிருப்பாளருக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு குப்பைகளைத் தத்தமது வீட்டு வாசல்களில் ஒழுங்கா கச்சேகரிக்க வசதி செய்யப்படவுள்ளதுடன், அவை இரு நாட்களுக்கு ஒரு தடவை அகற்றவும் ஒழுங்கு செய்யப்படவுள்ளது.

ஆகவே, மாநகரசபைக் குடியிருப்பாளர்கள் கூடிய வரை இந்த செயற்பாடுகளுக்கு ஆதரவு தருமாறும் டிசம்பர் மாதம் வரையிலான எமது இயலாமையை ஏற்றுக்கொள்ளுமாறும் தயவாக வேண்டுகின்றேன் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# யுவதி மீது அங்கசேஷ்டை; சிக்கியவர் பாடு 'அரோகரா'

(தனங்கிளப்பு)

தனியார் சிற்றூர்தி ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த யுவதி ஒருவர் மீது அங்க சேஷ்டையில் ஈடுபட்ட இளைஞன் ஒருவர் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் - கொடிகாமம் பகுதிகளுக்கிடையே சேவையில ஈடுபடும் தனியார் சிற்றூர்தி ஒன்றில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மேற்படி சிற்றூர்தியில் பயணம் செய்து கொண்டிருந்த யுவதி மீது அதே சிற்றூர்தியில் பயணம் செய்த இளைஞர் ஒருவர் அங்க சேஷ்டையில் ஈடுபட்டார்.

சம்பந்தப்பட்ட இளைஞன் அங்கசேஷ்டையில் ஈடுபடுவதையும் அதனால் சம்பந்தப்பட்ட யுவதி அவஸ்தைப்படுவதையும் அவதானித்த அச் சிற்றூர்தியில் பயணம் செய்து கொண்டிருந்த ஏனைய பயணிகள் சாவகச்சேரி பேருந்து தரிப்புநிலையப்பகுதியில் வைத்து சேஷ்டைகளில் ஈடுபட்ட இளைஞனை சிற்றூர்தியிலிருந்த பலவந்தமாகக் கீழே இறக்கி நையப்புடைத்தனர்.

அத்துடன், அவ் இளைஞனைக கலாசாரம் பேணும் குழுவினரிடம் சீர்திருத்த நடவடிக்கைகளுககாக ஒப்படைத்தனர்.(ப-37,7)

# தூவல் நீர்ப்பாசனத் திட்டத்தை யாழில் அமுல்படுத்துவது குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ.மாவட்டத்தில் செலான் வங்கியின் அனுசரணையுடன் 'தூவல்' நீர்ப்பாசனத் திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்று யாழ். செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த செலான் வங்கியின் ஆலோசகர் லயனல் பெனால்ட் மற்றும் பிராந்திய முகாமையாளர், வங்கி ஊழியர்கள் ஆகியோருடன் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆசிவசுவாமி, யாழ்.மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா, கமநலசேவை உதவி ஆணையாளர் சுந்தரேசன், யு.என்.டி.பி. பிரதிநிதி மற்றும் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நேற்றைய இக் கூட்டத்தில் தூவல் நீர்ப்பாசனத் திட்டத்தை யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் இத்திட்டத்திற்குரிய தொழில்நுட்ப விடயங்கள் குறித்தும் விரிவாக கலந்தாலோசிக்கப் பட்டது.

இத்திட்டத்திற்கென புலோலி, உடுவில், புத்தூர் மற்றும் கீரிமலை போன்ற கமநலசேவைகள் நிலையப்பிரிவில் இருந்து முதற்கட்டமாக பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளதாக அக் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது.

இவ்விடயம் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினமும் புத்தூர் கமநலசேவைகள் நிலையத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

## கூட்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்திலுள்ள பாரதி சனசமூக நிலையம், மாதர் முன்னேற்றச் சங்கம் என்பவற்றின் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2.30 மணிக்குப் பாரதி சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ப-126)

சிறுவிளம்பரம்

புதிய கல்வியாண்டு -2005

தரம் 01 முதல் O/L வரை ஆரம்பம்

06.12.2004

ஒழுக்கம், கட்டுப்பாடு, போதனை இவை எமது நிறுவனத்தில் மட்டுமே.

மதுகல்வி நிறுவனம்

டச்சுவீதி, இருபாலை

கோப்பாய். (C/814)

## நத்தார் இன்னிசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யா/கைதடி செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த நத்தார் இன்னிசை ஆராதனை இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் த.சாம்சன் லூர்திஸ் தலைமையில பாடசாலை மண்டபத்தில நடைபெறவுள்ளது.

இறையுரை யாழ் அகவொளி நிலைய அதிபர் அருட் கலாநிதி எஸ்.ஜே.இராசநாயகம் அடிகளாரால் இன்னிசை ஆராதனை வழங்கப்படவுள்ளது. (ச)

## கட்டாக்காலிகள் தொல்லை

(தனங்கிளப்பு)

தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதியில் இராணுத்தினரால் விடுவிக்கப்பட்ட வயல் நிலங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நிலங்களினுள் கட்டாக்காலி மாடுகள் புகுந்து பயிர்களை நாசம் செய்து வருகிறது.

இதனால், அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். (ப-37)

## வெளியீடு

(புங்குடுதீவு)

ஊனமுற்றோரை சமுதாய மட்டத்தில் வைத்துப் பராமரிப்பதற்கான தொண்டர்களால் உருவாக்கப்பட்ட "கொழுகொம்பு" எனும் கையெழுத்து சஞ்சிகை கடந்த திங்கட்கிழமை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை கேட்போர் கூடத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யு.என்.எச்.சி.ஆர். அலுவலகர் மு.சிவனேசனும் சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலக சமூக சேவை அலுவலகர் வே.தபேந்திரனும் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக சமூக சேவை அலுவலகர் வே.சிவராஜாவும் கலந்து கொண்டு உரையாற்றினர். (ப-126)

## மருத்துவ முகாம்

(புங்குடுதீவு)

தீவக லயன்ஸ் கழகமும், தீவக மருத்துவ பீட மாணவர்களும் ஒன்றிணைந்து நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் மாபெரும இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இதில் நோயியல் பரிசோதனைகள் செய்யப்பட்டு, மருந்து, கண்ணாடி ஆகியவற்றுடன் ஆலோசனை, பிற உதவிகளும் வழங் கப்படவுள்ளன. (ப-126)

## கரோல் சேவை

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த கரோல் சேவையும் இன்னிசை நிகழ்ச்சியும் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (து)

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல - குறள்

வலம்புரி

## மக்கள் பணியாற்ற ஆலயங்கள் முன்வரவேண்டும்

"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பது சைவ சமயம் உலகிற்கு ஓதிய அருள்மொழி. இறைவனை எங்கே காணமுடியும் எனில் அது ஏழைகளின் சிரிப்பில் என்ற தத்துவத்தை இங்கு சிந்தனைக்கு எடுத்துக்கொள்வது மிகவும் பொருத்தமானதாகும்.

உலகிலுள்ள எந்த சமயத்தை எடுத்துக்கொண்டாலும் அவை தர்ம காரியங்களை - அறக்கருத்துக்களை - அகிம்சை வழிகளையே எடுத்துக்கூறுகின்றன.

"உன்னைப்போல் பிறரையும் நேசி" என்ற யேசுபிரானின் வாக்கும், "பிற உயிர்களுக்கு இம்சை செய்யாதே" என்ற புத்தபிரானின் போதனையும் மனிதனின வாழ்க்கையை நெறிப்படுத்தும் தத்துவங்களாகும்.

இதேபோன்றே உலகின்கண் பரந்துள்ள எல்லா சமயங்களும் மனிதனைப் பண்படுத்தி, அவனை வாழ்க்கைக்கு உரியவனாக மாற்றும் வழிமுறைகளைப் போதிக்கின்றன. இருந்தும் சமயங்கள் போதிகின்ற கருத்துக்களை எத்தனை பேர் பின்பற்றுகிறார்கள் என்பது ஆராயப்படவேண்டிய விடயமாகும்.

மனிதனை ஒற்றுமைப்படுத்துவதற்காக - அவனை சமாதானப்படுத்துவதற்காக - சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்காக வகுக்கப்பட்ட சமய நெறிகள் இன்று பிறழ்வடைந்து எதிர் விளைவுகளைத் தருகின்றன.

ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்ற மெய்ப்பொருளை உணர்வார் எவருமில்லை. தத்தம் சமயம் சார்ந்த தெய்வங்களே உண்மையானவை என்ற பொய்மைக்குள் புரண்டு அலைபவர்கள் பிற சமயங்களை - வழிபாடுகளை மதிக்கத் தவறுகின்றனர்.

இத்தகைய இழிகுணம் ஒற்றுமையாக வாழவேண்டிய மனிதனை யுத்தத்திற்குள் அகப்படுத்தியுள்ளது. சமயப் போதனைகளுக்கு மாறாக எவர் செயற்படுகின்றார்களோ அவர்கள் தெய்வநிந்தனைக்கு ஆளாவார்கள் என்பது உண்மை. இவ்வாறு சமயத்தின் பேரால் சண்டைகள் இடம்பெறுவதைத் தடுப்பதில் ஆலயங்களும், ஆலயங்களைப் பரிபாலிக்கின்ற மத குருமார்களும் தவறிவிட்டார்கள் என்றே கூறவேண்டும்.

குறிப்பாக ஆலயங்கள் மக்கள் பணியை - சமூகப் பணியை முன்னெடுக்கத் தவறிவிட்டன என்பதே மேற்கூறப்பட்ட முரண்பாடுகளுக்கும், குழப்பங்களுக்கும் காரணமாக அமைகின்றன. ஆலயங்கள் என்பவை பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சமப்படுத்தும் நிலைக்களங்களாகும். தனவந்தர், நிலச்சுவாந்தர் என்போரிடம் இருந்து பெறப்படுகின்ற உதவிகளை நிதி குறைந்தவர்களுக்கும், காணியற்றோருக்கும் பகிர்ந்து வழங்கி அவர்களின் வறுமையைப் போக்குவதே ஆலயங்களின் பணியாகும்.

ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது. மனித சமூகம், உயிர்வாழும் மனிதன் பற்றி சிந்திக்காமல் ஆலயங்களை உடைத்துக் கட்டுவதையும், மிகப்பெரும் நிதிச் செலவில் கோபுரங்களை நிர்மாணிப்பதிலுமே ஈடுபட்டுள்ளது.

ஓலைக் குடிசைக்குள் ஒருநேர உணவுக்கு வழியின்றி உறங்குகின்ற ஏழைகளின் கண்ணீரைத் துடைக்காமல், படிக்க வழியின்றி சிறுபராயத்தில் வயதுக்கு மிஞ்சிய வேலைப்பளுவைச் சுமந்து குடும்பப் பாரத்தைத் தாங்கும் ஏழைச் சிறுவர்களின் ஏக்கங்களைப் புரிந்துகொள்ளாமல், உயர்ந்த இராஜ கோபுரங்களையும், வானுயர்ந்த தேவாலயங்களையும் கட்டுவதால் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை.

யுத்தத்தால் பாதிப்படைந்த யாழ்ப்பாணத்திலுள்ள வீடற்றவர்கள், காணியற்றவர்கள், விதவைகள், கவனிப்பாரற்ற முதியவர்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள், வசதியற்ற நோயாளர்கள் என்ற மிக நீண்ட பட்டியலை ஆலய நிர்வாகிகள் பார்க்கத் தவறிவிடுகின்றனர்.

யாழ். குடாநாட்டிலுள்ள குறிப்பிட்ட சில சைவ ஆலயங்களும், தேவாலயங்களும் நினைத்தால் யாழ்ப்பாணத்திலுள்ள வீடற்ற அனைவருக்கும் வீடுகளை வழங்கமுடியும். வசதியற்ற நோயாளர்களுக்கென தனியான மருத்துவமனையை அமைத்து இலவச சிகிச்சையை அளிக்கமுடியும். முதியோர் இல்லங்களையும், சிறுவர் நிலையங்களையும் பராமரிக்க முடியும். அந்தளவு தூரம் அந்த ஆலயங்களில் நிதி பலம் உண்டு.

ஆனால், அவற்றைச் செய்யும் மனப்பலம் உண்டா? இறைவா! நீயே உதவவேண்டும்.

---

### அமைதி முயற்சிகளின் வெற்றிக்கும், நிரந்தரத் தீர்வுக்கும்

# அரசியல் - இராணுவக் கட்டமைப்புக்களின் உளப்பாங்கில் மாற்றம் ஏற்படுவது அவசியம்

## சு.ப. தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டு



(கிளிநொச்சி)

நாட்டில் இரு தசாப்த காலமாக நிலவிவரும் இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுக்கும் அமைதி முயற்சிகளின் வெற்றிக்கும் இலங்கையின் அரசியல், இராணுவக் கட்டமைப்புக்களின் உளப்பாங்கில் மாற்றம் ஏற்பட வேண்டியது மிகவும் அவசியமாகு .

இந்த நடவடிக்கை மட்டுமே நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் சமாதானத்தின் எழுச்சிக்கும் உதவியாக அமையும என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார.

ஸ்ரீலங்கா எபர்ஸ்ட் அமைப்பினரை கடந்த புதன்கிழமை கிளிநொச்சியிலுள்ள புலிகளின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திச் செயலகத்தில் சந்தித்துப் பேசுகையிலேயே தமிழ்ச் செல்வன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியல் ஸ்திரத் தன்மையும், அமைதியும் பொருளாதார முன்னேற்றத்துக்குப் பின்னிப்பிணைந்த பிரதானமான தேவைகளாகும.

கடந்த காலப் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை நிவிர்த்தி செய்வதற்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு, புனர்நிர்மாண நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஆரம்பத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

அத்துடன் தலைவரின் மாவீரர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ள செய்தியை பிரதிநிதிகளிடம் விளக்கிக் கூறிய தமிழ்ச் செல்வன், அச்செய்தியை அரசாங்கம் தெளிவாகப் புரிந்து கொண்டால், பேச்சுக்களை ஆரம்பிப்பதில் உள்ள முட்டுக்கட்டைகள் விலகும் என்றார்.

மேலும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபு தொடர்பில் பேசி அது அமுல்படுத்தப்படும். அதன் பின்னர் இறுதித்தீர்வு குறித்துப் பேசலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் இராணுவக் கட்டமைப்புக்கள் தமிழர் விவகாரத்தில் எவ்வாறு எதிர்மறை உளப்பாங்குடன் நடந்துகொள்கின்றன என்பதற்கு சில உதாரணங்களைச் சுட்டிக்காட்டிய சு.ப. தமிழ்ச்செல்வன் அவை அமைதி முயற்சிகளுக்கான புறச் சூழலுக்குப் பாரிய தாக்கத்தையே ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டார். (ந-4)

---

# திருமலை வன்முறைச் சம்பவங்களுக்கு ஜே.வி.பியினரும், படையினருமே காரணம்

## ஊடகவியலாளர் சந்திப்பில் எழிலன் தெரிவிப்பு

(திருகோணமலை)

கார்த்திகை வீரர்கள் தினத்தை ஜே.வி.பியினர் நினைவுகூர முடிந்தால் விடுதலைப்புலிகள் ஏன் மாவீரர் தினத்தை நினைவுகூர முடியாது? என விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப பொறுப்பாளர் சி. எழிலன் கேள்விக்கணை தொடுத்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இராணுவத்தினருடனான சந்திப்பின் பின்னா ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் ஊடகவியலாளர் மத்தியில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

திருகோணமல்யில் அண்மைக்காலமாக இடம் பெறற வன்முறைச் சம்பவங்களுக்கு ஜே.வி.பி. யினரும படையினருமே காரணகர்த்தாக்களாகும்.

கடந்த 26 ஆம் திகதி வரை சுமுகமாக இருந்த நிலைமை, அதன் பின்னர் ஜே.வி.பியினரால் ஆரம்பிக்கப்பட்ட வன்முறைகளால்பெரும் குழப்பமடைந்தது.

ஜே.வி.பியினரும் படையினரும, தமிழ் மக்களினால மாவீரர் நாளை முன்னிட்டு திருகோணமலையில் அலங்கரிக்கப்பட்ட அலங்காரவளைவுகள் எல்லாவற்றையும் அறுத்தெறிந்தனர்.

நாங்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தோம். படையினரால் படுகொலை செய்யப்பட்ட ஜே.வி.பி உறுப்பினர்களை நினைவு கொள்கின்ற நிகழ்வு கடந்த நவம்பர் மாதத்திலே கார்த்திகை வீரர்கள் தினம் என்ற பெயரோடு ஜே.வி.பியினரால் அனுஷ்டிக்கப்பட்டது.

அதற்கு தமிழ் மக்களினால் எந்தவிதக் குழப்பமும் ஏற்படுத்தப்படவில்லை.

ஆனால், இதே படையினர்களால் தமிழ் மக்களின் விடிவுக்காகப் படுகொலை செய்யப்பட்ட மாவீரர்களை நினைவுகூருகின்ற பொழுது ஜே.வி.பி. யினர் குழப்புவது எங்களுக்கு வேடிக்கையாகவுள்ளது.

இப்படியான கீழ்த்தரமான மோசமான நடவடிக்கைகளை ஜே.வி.பியினர் இப்படித தூண்டிவிட்டு நடாத்துவது திருமலையில் ஒரு குழப்பமான சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே என்று எங்களுக்குத் தோன்றுகின்றது.

அவர்கள் இப்படியாகத் தொடர்ந்து குழப்பம் விளைவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் எனவும் குறிப்பிட்டார். (ந-4)

---

# 'சக்தி' குறித்த விமலின் கூற்றுக்கு அரசியல்வாதிகள் எதிர்ப்புத் தெரிவிப்பு

(கொழும்பு)

மகாராஜா நிறுவனத்தின் சக்தி ஒளிபரப்பு நிறுவனத்தில் கடமையாற்றுபவர்களில் அதிகளவானோர் விடுதலைப் புலிகளைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச பாராளுமன்றில் ஆற்றிய உரை தொடர்பாக அரசியல்வாதிகள் சிலர் தமது எதிர்க்கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

எவ்வளவு கசப்பான விடயங்களாக இருந்த போதிலும் உண்மைகளை உண்மைத் தன்மையாக வெளியிடும் தனியார் செய்தி நிறுவனங்களுக்கு எதிராக தங்களுடைய உணர்வுபூர்வமான அரசியலை அடிப்படையாகக் கொண்டு, இப்படியான அடிப்படையில்லாத விமர்சனங்களை விடுப்பதை ஜே.வி.பி தவிர்த்துக கொள்ள வேண்டும் என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் இது குறித்துக் குறிப்பிடுகையில்,ஜே.வி.பி.இவ்வாறு எழுந்தமானமாகக் குறிப்பிடுவதானது அதன் பொறுப்பற்ற செயற்பாட்டையே எடுத்துக் காட்டுகிறது.

தமிழர் பிரச்சினை சம்பந்தமாக ஊடகங்கள் தமது கடமையினை யாருக்கும் அடிபணியாமல் நேர்மையாகச் செய்வதை ஜே.வி.பியினர் விரும்பவில்லை என்றே எமக்குத் தோன்றுகிறது என்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பின் ஹஸன் அலி குறிப்பிடுகையில்,

அரச தரப்பினர் எப்போதும் தமக்கு ஆதரவாகத்தான் எல்லா ஊடகங்களும் செயற்பட வேண்டுமென்ற விபரீதமான எண்ணத்தைக் கொண்டிருக்கின்றார்கள்.

அதனால் அவர்களுக்கு எதிரான செய்திகள் அனைத்தையும் எதிரிகளின் செய்திகள் என்று அடையாளப்படுத்துவது அரசியலுக்கு நல்தல்ல என்று கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன் இது குறித்துக் கருத்து வெளியிடுகையில்,

பொறுப்பற்ற முறையில் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவனச சக்தி நிறுவனம் புலிகளுக்குச் சார்பாகச் செய்திகளை ஒளிபரப்புகின்றது என்று பழி சுமத்தியிருப்பது வேதனைக்குரிய விடயமாகும் என்றார். (ந-8)

---

### தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

பல மதங்களின் மிகவுயர்ந்த கனவு இந்த உலகம் தான்... நோயோ வறுமையோ துன்பங் களோ இல்லாத ஒரு காலத்தைப் பற்றி மக்களுள் பெரும்பான்மையினர் கனவுகண்டு கொண்டிருக்கின்றனர். அப்போது எங்கும் நன்மை மட்டும்தான் இருக்குமாம்.

சுவாமி விவேகானந்தர்

# கூட்டமைப்பு எம்.பிகளின் சிறப்புரிமையை கட்டுப்படுத்தினால் நாடு இரண்டாகப் பிரியும்!

## சபையில் சுரேஸ் பிரேமச்சந்திரன் எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் சிறப்புரிமையை கட்டுப்படுத்துவதற்காக பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களை செய்ய அரச தரப்பும் எதிர்த்தரப்பும் தீர்மானிக்குமேயானால் அது ஒன்றாகவுள்ள நாட்டை இரண்டாக பிரிக்க வழிவகுக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் சபையில் எச்சரிக்கை விடுத்தார்.

கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் கடந்த செவ்வாய்க்கிழமை சபையில் நிகழ்த்திய உரை அரசியலமைப்பின் 154 பிரிவுக்கு முரணானது என்றும் அது குறித்து சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர் அத்துரலியே ரத்னதேரர் நேற்று சபையின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

அதற்கு பதிலளித்த சபாநாயகர் வி.ஜே.மு. லெக்குப்பண்டார சம்பந்தன் எம்.பி.யின் உரையில் அரசியலமைப்பிற்கு முரணாக உள்ள பகுதி ஹன்சாட் அறிக்கையில் இருந்து அகற்றப்படும் என்றார். அப்போது குறுக்கிட்ட அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பிரிவினைக்கு ஆதரவாகவும், சுயாட்சிக்கு ஆதரவாகவும் உறுப்பினர்கள் சபையில் உரையாற்றுவதை தடுக்கும் வகையில் அரசியலமைப்பிற்கு அமைவாக பாராளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் ஐக்கிய தேசிய கட்சியின் களுத்துறை மாவட்ட உறுப்பினருமான மகிந்த சமரசிங்க அரசியலமைப்புத்தான் இந்த நாட்டின் முதன்மைச் சட்டம். எனவே அதற்கு முரணாக இந்த சபையில் உரைநிகழ்த்த இடமளிக்கக் கூடாது. அதற்குரிய வகையில் நிலையியற் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தார். அமைசசர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் கோரிக்கைக்கும் இணக்கம் தெரிவித்தார். அப்போது குறுக்கீடு செய்த சுரேஷ் பிறேமச்சந்திரன் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுரிமையை கட்டுப்படுத்த அரசாங்க தரப்பும் எதிர்த்தரப்பும் ஒன்றாக செயற்படுவதாக குற்றம் சாட்டினார். தற்போது பிரிந்து போயுள்ள இரு பிரதேசங்களையும் ஒன்றாக சேர்ப்பதற்காகவே இந்த சபையில் நாங்கள் உரை நிகழ்த்துகிறோம். ஆனால் நீங்கள் நிலையியற் கட்டளையை திருத்தி அதன் மூலம் எமது வாயை அடைக்க முற்பட்டால் அது தனிநாட்டை அமைப்பதற்கான ஆயத்த வேலையாகவே இருக்கும். தற்போது ஒரே நாடாக இருப்பதை இரண்டு நாடாக பிரிப்பதற்கே அது வழிவகுக்கும் எனவும் எச்சரிக்கை விடுத்தார். (க-43)



தென்னாபிரிக்காவில் நடைபெற்ற மாவீரர்தின நிகழ்வின் போது...

## ஐ.தே.கவின் முடிபுக்கு...

ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ரி. மகேஸ்வரன் விளக்கமளித்துள்ளார். வெளிவிவகார அமைச்சின் குழுநிலை மீதான விவாதம் நேற்று நடைபெற்றபோது ஐ.தே.க. வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ரி.மகேஸ்வரன் எதிர்த்து வாக்களித்தார். இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ரி. மகேஸ்வரன் கருத்துவெளியிடுகையில், லக்ஸ்மன் கதிர்காமர் தமிழராக இருந்தும் வெளிநாடுகளில் தமிழர்களுக்கு எதிராகவே பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார். இவரால் தமிழ் மக்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை. என்னைப் பொறுத்தவரை எனக்கு கட்சியைவிட எனது மக்கள்தான் பெரிது. இதன்காரணமாகவே கட்சியின் தீர்மானத்தைமீறி எதிர்த்து வாக்களித்தேன். இதுபற்றி கட்சிக்கு எடுத்துக் கூறியுள்ளேன்.

இதேவேளை ஐ.தே.கவில்அங்கம் வகிக்கும் மலையக மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினரானபீ.ராதாகிருஸ்ணன் இதுபற்றிக்கூறுகையில்,தமிழராகஇருந்தும்அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தமிழருடைய உரிமைப் போராட்டம்பற்றி எதுவும் பேசாதவர். தமிழ்மக்களுடைய போராட்டத்தினை எந்த விதத்திலும் அவர் ஆதரிக்கவில்லை.அதன் நியாயத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை.இதன்காரணமாகவேதானும் எதிர்த்துவாக்களித்ததாகஅவர்கூறினார். (இ-4)

## நாவலர் குருபூசை

இந்து கலாசார அலுவல்கள் திணைக்கழத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் நடாத்தும் ஆறுமுக நாவலர் குழுபூஜை தினவிழா இன்று மாலை 4.00 மணிக்கு நால்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கைதடி சைவ ஐக்கிய சங்கமும் இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி தேவஸ்தானமும் இணைந்து நடாத்தும் ஆறுமுக நாவலர் குரு பூஜை தினம் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆலய தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-49)

## சொல்ஹெய்மின்...

கர் கிளிநொச்சியில் சந்தித்து சுமார் இரண்டுமணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இப் பேச்சுவார்த்தைகளில் ஆராயப்பட்ட விடயங்கள் பற்றி நோர்வேத் தரப்பினருக்கு தெரியப்படுத்தியுள்ளார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (இ-04)

## வடக்கு...

னணியில் இணைந்து கொண்டார்.

இந்த நிலையில் வடக்கு கிழக்கு ஆளுநராக நீண்டகாலம் பதவி வகித்த அசோக ஜெயவர்த்தன பாதுகாப்பு அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டதை அடுத்து அந்த வெற்றிடத்திற்கு டிரோன் பெர்ணான்டோ நியமிக்கப்படவுள்ளார். இவர் லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகப்பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# மட்டக்களப்பில் குடும்பஸ்தர் நேற்று சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாண்டவன் வெளியிலுள்ள விடுதியொன்றில் குடும்பத்துடன் தங்கியிருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மாலை 6.15 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த ஜோன்பிள்ளை சந்திரமோகன் (வயது 33) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவர் கடந்த சில மாதங்களாக ஐரோப்பிய நாடொன்றிற்கு செல்வதற்காக தனது மனைவி பிள்ளைகளுடன் இந்த விடுதியில் வாடகைக்கு தங்கியிருந்தார். இவர் பொலிஸ் சேவையில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டவர் என்று தெரியவந்துள்ளது.

விடுதியின் பின்பக்கம் வெளியே குளித்துக்கொண்டிருந்த சமயம் பின்புறத்தால் வந்த துப்பாக்கிதாரிகள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளார்கள். (04)

## கோஷ்டி மோதல்களினால் அச்சுறுத்தல்

# குருநகர், திருநகர்ப் பகுதிகளில் சுத்திகரிப்பு பணிகள் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

குருநகர், திருநகர் பகுதிகளில் ஏற்பட்ட கோஷ்டி மோதல்களை அடுத்து அப்பகுதிகளில் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபட யாழ். மாநகர சபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் மோதல்களில் ஈடுபட்டு வந்த இருதரப்பினர்களிடையேயும் . சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டபோதும் அவை பலனளிக்கவில்லை தொடர்ந்தும் அங்குபதற்றம் நிலவி வருகிறது.

இதனால் அப்பகுதிகளில் இயல்புநிலை திரும்புவதை சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபடுவதை யாழ். மாநகர சபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் இடைநிறுத்தியுள்ளனர்.

அதன் காரணமாக குருநகர், திருநகர்ப் பகுதிகளில் சுகாதார சீர்கேடுகள் ஏற்படும் அபாயம் தோன்றியிருக்கிறது. இதற்கான மாற்றுத் திட்டங்களை மாநகர சபை ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை குருநகர்ப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை தீர்க்கப்படும்வரை சுத்திகரிப்புத் தொழிலாளர்களை அங்கு பணிக்கு அனுப்பப்போவதில்லை என மாநகர சபையினர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ப-51)

## பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க...

தைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் தயாராகவிருக்கின்றது.

ஆனால் விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக வரைபின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை காரணமாகவே பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் அவர் சகலவிடயங்களையும் உள்ளடக்கியதாகப் பேசவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். ஆனால் புலிகளோ தம்மால் முன்வைக்கப்பட்ட இடைக்கால வரைபின் அடிப்படையில் பேசவேண்டும் என்று கூறுகின்றனர்.

அதேவேளை விடுதலைப் புலிகள் அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பல்வேறு அபிப்பிராயங்களை முன்வைத்து வருகின்றனர். இந்நிலையில் சமாதானத்தை நிலை நிறுத்துவதற்கு அரசியல் அர்ப்பணிப்பும் துணிவும் அவசியம். அப்போதுதான் சமாதானத்தை நிலைநாட்ட முடியும்.

பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் ஒரே நிலைப்பாட்டுக்கு வருவது அவசியமென்று கூறிய அவர் சமாதானத்தை ஏற்படுத்துவதும் இலகுவான காரியமல்ல என்றார்.

இதேவேளை நடைமுறையிலுள்ள போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை தகர்ப்பதற்கு எந்தவொரு அவசியமும் ஏற்படவில்லை என்றும் அது தொடர்ந்தும் அமுலில் இருக்குமென்றும் அவர் கூறினார். (இ-8)

## சாவகச்சேரியில்...

ரும் வீதியில் சென்றுகொண்டிருந்த சிறுவனுக்கு இடம் விட்டுக் கொடுக்க முற்படுகையிலேயே விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. (ப-37-29-05-47)


# வலிகிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
# கேள்வி அறிவித்தல் – 2004

கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு இக்ராட் எம் – 09 பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி - 06.12.2004 முதல் 09.12.2004வரை**
**கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 10.12.2004 பி.ப. 1.00மணிவரை**
**கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி - 10.12.2004 பி.ப. 2.00 மணி**

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், வலிகிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகம் நீர்வேலி" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல. 29, செட்டித்தெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் எதிர்வரும் 10.12.2004 ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்க வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கக் கூடிய வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படாத பெறுமதி சேர்வரி |
|---|---|---|---|---|
| 01. | நீர்வேலி சீயாக்காடு இந்து, கத்தோலிக்க மயான வீதி திருத்த வேலை | 6250/= | 500/= | 75/= |
| 02. | உரும்பிராய் வேம்பன் சுடலை வீதி திருத்த வேலை | 6250/= | 500/= | 75/= |

மேற்படி வேலைகள் யாவும் 25.12.2004 இற்கு முன் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி
2004.12.03

இராசரத்தினம் இராசதுரை
செயலாளர்

(C/815)










## பிரதேச செய்தியாளர்களுக்கான முக்கிய கூட்டம்

எமது பிரதேச செய்தியாளர்களுக்கான முக்கிய கூட்டம் இன்று 04.12.2004 முற்பகல் 10.30 மணிக்கு வலம்புரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

அதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நிர்வாக உத்தியோகத்தர்
(வலம்புரி - சங்குநாதம்)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2004 இல் அச்சிட்டு